# 44. அனைவரும் உறவினர்

## 1

சின்னாற்றூர், சேரநாட்டிலுள்ள ஒரு சிற்றூர். அதில் நூறு வீடுகள் உண்டு. ஊரைச் சுற்றி நன்செய் புன்செய் பரந்து கிடக்கும். அங்கங்கே மலர் வனங்களும், தோப்புக்களும் நிழல் தரும். சிற்றாறு ஒன்று, மடுக்கள் பல. அவை வற்றாப் புனல் வழங்குவன.

சேரமன்னன் ஆணைபெற்றுப் புலம்பெற்றியார் நாட்டாண்மை நடத்தி வருகின்றார். அவர், ஊரில் ஏற்படும் எவ்வகை வழக்குகளை யும் ஆய்ந்து தீர்ப்புக் கூறும் அதிகாரம் உடையவர்.

பெருவேலன் என்பவர் அவ்வூரின் பெருநிலக் கிழவர் மற்றும் நாலைந்து பேர் அவருக்கு வலக்கை இடக்கை போன்ற செல்வம் படைத்தவர்கள். ஏனையோர் அவர்களிடம் வேலை பார்ப்பவரும், உழுபவரும் ஆவார்.

சிற்சில நாட்களின் முன் இரண்டு திருமணம் ஊரில் நடந்தன. அஞ்சி என்னும் இளைஞன் பெருவேலனிடம் வேலை பார்ப்பவன். அவனுக்கும் வரிசிலை என்னும் நிலக் கிழவனிடம் வேலை பார்க்கும் மாறனின் தங்கை அழகம்மாவுக்கும் நடந்த திருமணம் ஒன்று. மற்றொன்று, அஞ்சியின் தங்கை மருதிக்கும் அழகம்மா அண்ணன் மாறனுக்கும் நடந்த திருமணம்.

அஞ்சியின் வீடு அரசமரத்துத் தெருவில் அமைந்தது, மாறன் வீடு மருதமரத்துத் தெருவில் வாய்ந்தது.

ஒருநாள் காலை அஞ்சியிடம் மாறன் வந்தான்.

**மாறன்:** அத்தான்! உன் தங்கை ஆற்றங்கரைப் பூங்காவிற்கு அழைத்தாள் என்னை, நீயும் என் தங்கையைக் கூட்டிக்கொண்டு சும்மா... அப்படி?

**அஞ்சி:** என்ன அத்தான் இது. உன் தங்கையும் என் தங்கையும் ஒத்துப் பேசிக்கொண்டார்கள்போல் இருக்கிறது. என்னை உன் தங்கை அழைத்தாள் ஆற்றங்கரைப் பூங்காவிற்கு இப்போது...

**மாறன்:** கிளம்பலாமா? எங்கே என் தங்கை? உடுத்திக்கொள்ளச் சொல்.

**அழகம்மா:** (மாற்றி உடுத்த உடையுடன் வந்து) போகலாமா?

**அஞ்சி:** அடி சக்கே. முன்னேற்பாடாகவே இருக்கிறாய். போகையில் மருதியையும் அழைத்துப் போகலாம்.
(போகிறார்கள்)

## 2

அஞ்சி, அழகம்மா இணைந்து நடக்க, மாறன் மருதியுடன் நடந்து செல்லுகிறான்.

**அஞ்சி :** தழையடர்ந்த பெருமரங்கள், வானத்தின் கீழ் ஒரு பச்சை வானம், சிறிதும் வெய்யில் தெரியவில்லை.

**அழகம்மா :** கம்பளிப் போர்வை வேண்டும் போலிருக்கிறது. அத்தனை குளிர்ச்சி அத்தான்.

**அஞ்சி :** நாம் ஒருவரை ஒருவர் இழுத்துப் போர்த்துக்கொண்டால் போகிறது.

**அழகம்மா :** (முகம் சுளித்து) அண்ணன் வருகிறார்? என்ன பேச்சு? (சிறிது தொலைவில்)

**மாறன் :** என்ன மருதி! கட்டுப்கோப்பான இடமா இது? தனியறை என்ற எண்ணமா இந்தச் சிட்டுக்களுக்கு? காதல் விளையாட்டைப் பார். அவைகளுக்கு வெட்கமில்லை.

**மருதி :** அலரி இல்லையா அத்தான்? மல்லிகையைப் பாருங்கள் முத்து முத்தாய். இவைகள் உங்கள் கண்ணைக் கவரவில்லையா? வேண்டாத மதிப்புரை எதற்கத்தான்.

மற்றும் பூங்காவின் புதுமை கண்ட வண்ணம் உலாவுகிறார்கள் வெய்யில் மறைகிறது. அஞ்சியின் மடியில் அழகம்மா தலைவைத்துப் படுத்தபடி ஆற்றங்கரையில் வரிசையாய் நிற்கும் மலர்க் கிளைகளின் அழகை நுகர்கிறாள்.

(அதே நேரத்தில் மற்றொரு புறம் மாறனும் மருதியும்)

**மருதி:** என்ன குளிர்! என் தோளின் மேல் கையைப் போட்டுக் கொள்ளுங்கள்.

மாறன்: (அதைக் காதில் வாங்கவில்லை) அத்தான் எங்கே இருக்கிறாய்?

அஞ்சி: (அங்கிருந்தபடியே) இங்குத் தான் இருக்கிறேன்.

மாறன்: நேரமாகவில்லை?

அஞ்சி: உன் தங்கை என் மடியில் படுத்துக்கொண்டு எழுந்திருக்க மாட்டேன் என்கிறாள்.

மாறன்: நான் போகவேண்டும் அறுத்த அரிக்கட்டுக்களுக்கு இன்று இரவு காவல் இருக்கவேண்டியது என்முறை.

அஞ்சி: அப்படியானால் நீ போகலாம்.

மாறன்: மருதி! விரைவில் வீடுபோய்ச் சாப்பிட்டுவிட்டு வயலுக்குப் போகவேண்டும். இன்றிரவு காவல் என்முறை.

மருதி: என் அண்ணன் உங்கள் தங்கைமேல் வைத்திருக்கும் அன்பைப் பாருங்கள். நீங்கள் என்மீது காட்டும் அன்பைப் பாருங்கள்.

மாறன்: மருதி! கடமை! கடமை! மற்றவை அதன் பிறகு.

அவன் போகிறான்.

(அவள் போகிறாள்)

மறுபுறம்

**அஞ்சி:** அழகம்மா! நானுந்தான் காவலுக்குப் போகவேண்டும்.

**அழகம்மா:** கடமையைச் செய்யாமல்? எழுந்திருங்கள்.

**அஞ்சி:** உன்னைப் பிரிந்தா? மனம்வருகிறதா?

**அழகம்மா:** இன்னும் சிறிது நேரத்திற்குப் பின் போகலாமா அத்தான்?

**அஞ்சி:** வீட்டுக்குத்தானே? பார்ப்போம்.

## 3

அஞ்சியும் அழகம்மாவும் இரவு ஏழு மணிக்கு அரசமரத்துத் தெருவில் தம் வீடு வந்தார்கள். உணவருந்தினார்கள், எட்டு மணியாய்விட்டது.

**அழகம்மா:** நீங்கள் கொல்லைக் காவலுக்குப் போக வேண்டுமே

அஞ்சி: ஆமாம் இன்னும் சிறிது நேரம் பொறுத்துப் போனால் என்ன முழுகிவிடப் போகிறது? வெற்றிலை கொண்டு வா. நடுவீட்டு முற்றத்தில் தடுக்கைப் போடு. அழகம்மா நிலவைப் பார்த்தாயா?

அழகம்மா: நிலவின் ஒளியில், உங்கள் முகந்தான் அத்தான் என் நெஞ்சை அள்ளுகிறது. நான் மடித்து கொடுக்கிறேன் வெற்றிலை இதோ... என்ன அத்தான் கையால் வாங்குகிறீர்கள்.

வாயில் வெற்றிலை சுருள் கொடுத்து மகிழ்கிறாள்.

அஞ்சி: இதென்ன அழகம்மா. எப்போது பார்த்தாலும் தொல்லை. லொக்கு லொக்கு என்று இந்த அண்டை வீட்டுக்கார ஆனையப்பன் இருமிக் கொண்டேயிருக்கிறான்.

அழகம்மா: என்ன செய்வான் இரங்கத் தக்கநிலை! தொலையாப் பிணி அது கிடக்கட்டும் அத்தான். ஒரு பாட்டு நிலாப்பாட்டு.

அஞ்சி:

**பாட்டு**

**ஒளியோடு குளிரோடு புறப்பட்ட நிலவே - என்**
**உணர்வோடு காதலைச் சேர்த்தாய் நல் - ஒளி**
**களியோடு நின்மேனி தழுவிற்று வானம்**
**காதல் நெருப்பைத் தழுவினேன் நானும் - ஒளி**
**உளத்தை நீ படுத்தும் பாடு - நான்**
**உலகையே மறப்பேன் இன்றோடு - ஒளி**
**துளிபோதும் நான் விரும்பும் அவளிடம் ஓடு**
**தொல்லைசெய். என் துணை நாடுவாள் பிற்பாடு - ஒளி**

அழகம்மா: அத்தான் நாழிகையாகிறதே. நீங்கள் போகவேண்டாம்?

அஞ்சி: போகவேண்டும். இது ஒரு தொல்லை.
(போய்விடுகிறான்.)

## 4

வேம்பு என்பவன் களத்தில் காவல் காத்திருக்கிறான். பகல் முழுதும் காக்கவேண்டியது அவன் பொறுப்பு. இரவில் அஞ்சி காவல் ஒப்புக்கொள்ள வருவான் என்று வேம்பு எதிர்பார்க்கிறான். காலம் தாழ்த்து அஞ்சி வருகிறான்.

**வேம்பு:** இத்தனை நேரம் என்ன அஞ்சி?

**அஞ்சி:** என் மனைவிக்குத் தலைவலி. மருத்துவரை அழைக்கப் போனேன்; வந்தேன். என் மனைவியின் கையைப் பார்க்கச் சொன்னேன். மருந்து கொடுத்தார் மருத்துவர். அதை உண்ணும் படி மனைவியை வற்புறுத்தினேன். சாப்பிட்டேன். அவளைச் சாப்பிடச் சொன்னேன், சோற்றை. கை கழுவினேன். வெற்றிலை போட்டுக் கொள்ளவும் இல்லை. நீ காத்திருப்பாய் என்று ஓடிவருகிறேன் இரைக்க இரைக்க! சரி விரைவில் நீ போ.

வேம்பு போய்விடுகிறான். அவன் தொலைவில் போனவுடன் அஞ்சி அங்குப் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில்தான் படுத்திருப்பதுபோல் தோன்றுபடி வைக்கோலைக் குமித்து, அதன்மேல் தான் போர்த்திருந்த வெள்ளைத் துப்பட்டியால் மூடிவிட்டுப் போய்விடுகிறான் தன் வீட்டுக்கு.

சிறிது நேரம் செல்லக்களத்தில் குவித்திருக்கும் நெல்லைத் திருடும் நோக்கத்தோடு இருவர் வருகிறார்கள்.

**திருடன் 1:** (அஞ்சி படுத்திருப்பதாக எண்ணி) அண்ணே கொஞ்சம் பாக்கு இருந்தா கொடுக்கிறீர்களா? அண்ணே! அண்ணே!

**திருடன் 2:** தூங்குவதுபோல் இருப்பாரடா அவர், அன்னேன்.

துப்பட்டியைத் திறக்க வைக்கோல்தான் இருக்கிறது. கோணிப் பை இரண்டு நிறைய நெல் நிறைக்கப்படுகிறது. எடுத்துப் போய் விடுகிறார்கள்.

மீண்டும் வருகிறார்கள். மற்றும் இரண்டு கோணிப்பை நெல்லைக் கொண்டு போகிறார்கள்.

மீண்டும் மீண்டும்.

சிறிது நேரத்தில் நிலத்திற்கு உடையவனான பெருவேலன் மேற்பார்வைக்கு வருகிறான்.

**பெருவேலன்:** யார் காவல்? வேம்பு! அஞ்சி!

ஒருவருமில்லை. நெல்லின் நிலையைப் பார்க்கிறான். களவு போனது தெரிகிறது.

அடுத்த களத்திலிருந்த கூனனைக் கூப்பிட்டுவந்து விட்டு விட்டுப் போய்விடுகிறான்.

## 5

அஞ்சியும் அழகம்மாவும் காதலால் விழுங்கப்பட்டவர்களாய் ஆடியும் ஓடியும் பாடியும் பற்றியும் இருக்கிறார்கள்.

**அஞ்சி:** கூட்டில் விடுபட்ட பச்சைக் கிளிபோல் என்கைக்குத் தப்பி எங்கே ஓடுகிறாய்?

அவள் ஓட இவன் துரத்திப் பிடிக்க முயலுகிறான். அவள் அகப் பட்டுக் கொள்கிறாள். அஞ்சி அவளைத் தூக்கிக் கொள்கிறான். அங்கிருந்த ஒரு மரப்பெட்டி தடுக்கிவிட இருவரும் விழுகிறார்கள். அதன்பின் செம்புகள் இவர்களின் கால்படக் கலகலவென்று ஓசையிட்டு உருளுகின்றன.

அடுத்த வீட்டில்...

**ஆனையப்பன்:** தூக்கம் வரவில்லை இவர்கள் அடிக்கும் கூத்தால், நாடோறும் இப்படி, நாளைக்கு ஆகட்டும் வழக்கிட்டுத்தான் தீர்க்க வேண்டும். (இருமுகிறான்)

**அழகம்மா:** என்னை விட்டு விடுங்கள். நீங்கள் விரும்பியபடி நடக்கிறேன். ஆமாம் அத்தான் இதோ விடியப் போகிறது. களத்துக்கு யாரை விட்டு வந்தீர்கள். நெல் களவு போய்விட்டால்?

**அஞ்சி:** களத்தில் என்போல் வைக்கோல் குமித்துத் துப்பட்டி போர்த்தி மூடிவிட்டு வந்தேன்.

அஞ்சியும் அழகம்மாவும் அறையில் நுழைகிறார்கள்.

அடுத்த வீட்டில்

**ஆனையப்பன்:** ஆ! விடியப்போகிறது. ஓய்ந்தது இவர்கள் கூத்து.

## 6

சின்னாற்றூரின் மேற்புறத்தில் உள்ள பெரியதோர் ஆலமரத்தின் அடியில் கண்ணகியின் உருவச்சிலை காணப்படுகிறது. அதை யடுத்துப் புலம்பெற்றியார் வீற்றிருக்கிறார். அண்டையில் கணக்கன் பொன்னன் எழுத்தாணி ஓலைக்கட்டுடன் உட்கார்ந்திருக்கிறான். எதிரில் பொது மக்கள் பலர் அடக்கமாக அமர்ந்திருக்கிறார்கள்.

**புலம்பெற்றியார்:** கண்ணகி தனது சிலம்பென்று பாண்டியன்பால் எண்பித்தவுடன் மனது கலங்கி மண்ணிற் சாய்ந்திறந்தான்

அன்றோ? அவ்வாறு சேர நாட்டு மக்கள் தாம் செய்த குற்றத்திற்கு வருந்துவாராக. அன்றியும் தம் பொருளை இழந்தார் எவரும் நம்பால் வழக்கிடுவாராக!

சேரன் ஆணைப்படி இன்று மன்று தொடங்கப்படுகிறது.

ஒருவன் தன் வழக்கைக் சொல்லுகிறான்.

ஐயா,

என் பெயர் மண்ணப்பன்; வஞ்சி வீதியில் இருப்பவன்; என் தந்தை பெயர் பொன்னையன்.

கணக்கன் எழுதுகிறான்.

ஏணித் தெரு வீறு, என் எருமையை ஓட்டிக்கொண்டு போய்த் தன் கொட்டகையில் கட்டிக்கொண்டு கொடேன் என்கிறான். என் சொத்தை வாங்கிக் கொடுக்க வேண்டுகிறேன். சான்றினர்: முள்ளித் தெரு முத்து, சாரம் சப்பாணி.

**புலம்பெற்றியார்:** நாளை அவரை அழைக்கிறோம். நீரும் வருக. ஊர்க்காவலர் அஞ்சியை அழைத்தார்களோ?

**கணக்கர்:** அழைக்கச் சென்றுள்ளார்கள். வழக்கிட்ட பெருவேலனாரும் ஆனையப்பரும் வந்திருக்கின்றாரோ?

**பெருவேலன்:** ஆம் ஐயா.

**ஆனை:** ஆம் ஐயா.

ஊர்காவலர் அஞ்சியைக் கொண்டுவந்து மன்றின் எதிர் நிறுத்துகிறார்கள்.

**புலம்பெற்றியார்:** உம் பெயர் அஞ்சியோ? அரச மரத்துத் தெருவோ?

**அஞ்சி:** ஆம் ஐயா,

**புலம்பெற்றியார்:** என்ன பணி செய்வீர்!

**அஞ்சி:** பெருவேலனார் நிலக்காவற் பணி.

**புலம்பெற்றியார்:** பெருவேலனார் பேசுக.

**பெருவேலன்:** இவர் இன்றிரவு நிலக்காவற்பணி நிகழ்த்தவில்லை. அதனால் ஐம்பது கலநெல் கள்ளரால் அழிந்தது.

**அஞ்சி:** நான் காவலிருந்தேன்.

**புலம்பெற்றியார்:** சேரமன்னர் ஆணையாக!

**அஞ்சி:** சேரனார் ஆணையாக.

**பெருவேலன்:** இன்றிரவு நானே நேரிற் சென்றேன். இவர் இல்லை. அண்டைக் களத்திலிருந்த கூனரை அழைத்து விட்டுவிட்டு வீடு திரும்பினேன்.

**அஞ்சி:** வேம்பு காவல் காத்திருந்தான். அவனை வீடு போக்கி நான் காவல் தொடங்கினேன்.

**புலம்பெற்றியார்:** வேம்பு ஒப்புகிறாரா?

**வேம்பு:** ஆம் ஐயா!

**பெருவேலன்:** களத்தில் அஞ்சி இல்லாமைக்கு நான் விடும் சான்றினர் கூனர். அவரைக் கேட்க வேண்டுகிறேன்.

**புலம்பெற்றியார்:** கூனர் உம் ஆள் அல்லரோ?

**பெருவேலன்:** ஆம் ஐயா

**புலம்பெற்றியார்:** கொள்ளோம்!

**ஆனையப்பன்:** இந்த அஞ்சியார் மேலேயே நான் இடும் வழக்கை ஆய்தல் வேண்டும்.

**புலம்பெற்றியார்:** உரைக்க.

**ஆனையப்பன்:** இன்றிரவெல்லாம் அஞ்சி தம் புது மனைவியுடன் ஆடிப்பாடிக் கிடந்தார். அதனால் எனக்குத் தூக்கம் கெட்டது. நாடோறும் இப்படி.

**புலம்பெற்றியார்:** அஞ்சியாரே. என்ன இயம்புவீர். நீர் நும் வீட்டில் இரவெல்லாம் இருந்ததாக ஏற்படுகின்றதே?

**அஞ்சி:** நான் வீட்டுக்கு வரவேயில்லை.

**ஆனையப்பன்:** அஞ்சியார் வீட்டில் இன்றிரவு விடியுமட்டும் நடந்த காதல் பேச்சும், காதல் ஆட்டமும், கூச்சலும் குளறுபடியும் நான் மட்டுமல்ல, இதோ இவர்களும் கேட்டிருந்தார்கள்.

**புலம்பெற்றியார்:** என்ன?

**ஆரல்:** ஆம் ஐயா!

**வெள்ளி:** ஆம் ஐயா!

**காடு:** ஆம் ஐயா!

**புலம்பெற்றியார்:** இன்னின்னார் என்று விளக்குங்கள்.

**ஆரல்:** அஞ்சியார் வீட்டில் அழகம்மாவும் மற்றோர் ஆடவரும் - ஆடவர் இன்னாரென்று சொல்ல இயலவில்லை. விளையாடி யிருந்தார்கள்.

**மற்றவர்கள்:** ஆம் ஐயா!

**புலம்பெற்றியார்:** சேரமன்னர் ஆணையால் நான் சொல்லுந் தீர்ப்பு இதுவாகும்:

அஞ்சியார் இன்றிரவு களத்தில் தங்கினார் என்று ஏற்படுகிறது. அவர் களத்தில் இல்லையென்று பெருவேலர் சொல்லுவது நம்பத்தக்க தன்று.

## 7

அஞ்சியார் களத்தில் இருக்கவும், ஐம்பதின் கலநெல் களவு போனது கொண்டு களத்தில் அஞ்சியார் தூங்கியிருக்கலாம் என்றோ, சிறிது நேரம் அவ்விடத்தை விட்டு நீங்கியிருக்கலாம் என்றோ தோன்றுகிறது. ஆயினும் ஐம்பது கல நெல்லை இழந்தவர்க்கு அதன் விலையாகிய ஐந்நூறு பணத்தை அஞ்சியார் தரவேண்டும் என்பது என் முதல் தீர்ப்பு.

இரண்டாவது தீர்மானம் என்னவெனில் - இவ்வழக்கில் இடை நிகழ்ச்சியாக ஒரு செய்தி கிடைக்கிறது. அஞ்சியார் களத்திலிருந்தார். அந்த இரவில் அஞ்சியார் மனைவி அழகம்மா வேறொருவருடன் காதல் விளையாட்டு நடத்தியிருக்கிறார் விடியுமட்டும். அழகம்மா கற்பு ஐயப்படத் தக்கதாயிருப்பதால், அழகம்மா மக்கள் இருப்பில்லாத இடத்தில் தனிவாழ்வு நடத்தவேண்டும். இதனை அவர் கணவர் ஒத்துக் கொள்வாராயின் அவரும் அந்த அழகம்மாவுடன் செல்லலாம்.

இன்றிலிருந்தே இத் தீர்ப்புகள் செயற்படுத்தப்படும்.

(அஞ்சியின் தலை குனிகிறது. அவன் கண்களில் நீர் ததும்புகிறது)

**கணக்கர்:** அஞ்சி தரவேண்டிய ஐந்நூறு பணத்திற்காக அவரின் அசையும் பொருள் அசையாப் பொருள் பறிக்கப்படும்.

ஏலத்தால் விற்கப்படும்; பெருவேலனார்க்கு அளிக்கப்படும். அஞ்சியாரே! நீரும் உமது மனைவியாருடன் போக எண்ணமா?

**அஞ்சி:** ஆம் ஐயா!

**கணக்கர்:** தீர்ப்புக்களைச் செயற்படுத்தும் வரைக்கும் நீவீர் காவலில் இருக்க! தீர்ப்பு உம் மனைவியார்க்கு அறிவிக்கப்படும். (அஞ்சியைக் காவலன் அழைத்துச் செல்லுகிறான்.)

## 8

(அழகம்மாவும் மருதியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அழகம்மாவின் வீட்டில்)

**அழகம்மா:** உங்கள் அண்ணனார் இரவு களத்திற்குப் போகவில்லை. அதன்பொருட்டுப் பெருவேலனார் வழக்கிட்டாரோ என்னவோ தெரியவில்லை. நாட்டாண்மைக்கரர் அழைத்தார். இவர் சென்றார்.

(இதற்குள் காவலன் ஒருவன் அழகம்மாவிடம் வந்து நிற்கிறான்.)

**காவலன்:** நீரோ அழகம்மா என்பவர்.

**அழகம்மா:** ஆம்!

**காவலன்:** சேரமன்னர் பேரால் புலம்பெற்றியார் தீர்ப்பு.

உமது கற்பு ஐயப்படத் தக்கது. ஆதலின் நீவிர் தனிமையாகவோ கணவருடனோ மக்கள் இருப்பற்ற இடத்திற்குப் போக வேண்டும். உம் வீடு முதலிய அசையாப் பொருள்களும், பேழை முதலிய அசைப் பொருள்களும் அரசினர் கையில் வைக்கப்படும்.

**அழகம்மா:** என் கற்பு ஐயப்படத்தக்கது! எவன் செய்த தீர்ப்பு? என் கணவர் முன் செய்யப்பட்டதா இத்தீர்ப்பு?

**காவலன்:** சினம் தீயது அம்மா! தீர்ப்பை மறுத்து வழக்காட எண்ணினால் சொல்லுங்கள். நான் போய் நாட்டாண்மைக்காரரிடம் கூறுகிறேன். உம் கணவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

**அழகம்மா:** ஆம், போய்ச்சொல்.

(காவலன் போகிறான்.)

**அழகம்மா:** அண்ணியாரே, என் கற்பு ஐயப்படத்தக்கதாம். நான் மக்களற்ற இடம் சென்று நாள் கழிக்க வேண்டுமாம். சொத்தெல்லாம் அரசினர் கையில் இருக்குமாம். இடிவீழ்ந்தது திடீரென்று என் வாழ்வில், கணவர் காவலில் வைக்கப்பட்டிருக் கிறாராம். என் கற்பில் ஐயம்! எனக்கொரு வாள் தேவை! என் உயிர் அல்லது நாட்டாண்மைக்காரன் உயிர் போகவேண்டும். ஆயுதச்சாலை! ஆயுதச்சாலை!

(ஓடுகிறாள்.)

(மருதி நடுக்கத்துடன் நிற்கிறாள்.)

பூட்டப்பட்டிருக்கும் ஆயுதச்சாலையின் கதவை உடைக்கிறாள் அழகம்மா. மக்கள் கூடிவிடுகிறார்கள்.

**அழகம்மா:** எனக்கு வாள் ஒன்று தேவை.

(கதவை உடைக்கிறாள்.)

**பொது மக்களில் ஒருவன்:** அம்மா சினம் தீது. அமைதி படுங்கள்.

**அழகம்மா:** என் கற்பில் ஐயப்படுகிறான் நாட்டாண்மைக்காரன்.

(கதவை உடைக்கிறாள். உடைபட்டு விடுகிறது. வாள் ஒன்றைத் தூக்கிக் கொள்ளுகிறாள். தன் கணவன் காவற்படுத்தப்பட்டிருக்கும் இடத்தை நோக்கி ஓடுகிறாள்.)

## 9

(சிறைச் சாலையில் அடைக்கப்பட்ட அஞ்சி, அங்கு உலவு கிறான். கம்பிக் கதவின் இடுக்கில் அவன் உலவுவது தெரிகிறது. அழகம்மா சினத்தோடும் வியப்போடும் பார்க்கிறாள்.)

**அழகம்மா:** அத்தான் ஏன் இந்த நிலை? என் கற்பில் ஐயமா? ஏன் சொன்னான்?

**அஞ்சி:** என் கண்ணே! வாளைக் கீழே போடு.

**அழகம்மா:** என் கற்பை ஏன் குறை கூறினான்?

**அஞ்சி:** நான் காரணமாயிருந்தேன். இரவு காவலில் இருந்தாயா என்றான் நாட்டாண்மைக்காரன். இருந்தேன் என்று கூறினேன். அதே நேரத்தில், அண்டைவீட்டுப் பிணியாளன் என்மேல் ஒரு

வழக்கிட்டான். அவன் கூறினான்; அழகம்மா வீட்டில் அழகம்மாவும் மற்றொருவனும் இரவெல்லாம் கூத்தடித்ததால் தூக்கம் கெட்டது என்றான். அதைக் கொண்டு நாட்டாண்மைக் காரன் உன் கற்பில் ஐயங்கொண்டு இவ்வாறு தீர்ப்புக் கூறினான்.

**அழகம்மா:** ஐயோ! என்மேல் வீழ்ந்தபழிக்கு உங்கள் ஒரு பொய் காரணமாயிற்று. எதிர்வழக்காட நினைத்தேனே! அத்தான்! அவனிடம், நான் என் கணவருடன் தான் இரவில் மகிழ்ந்தேன் என்றால், காவல் காத்திருந்தேன் என்று நீங்கள் சொன்னது பொய்யாகிறதே. என்ன செய்வேன்! (வாளைக் கீழே எறிகிறாள்.)

**காவலன்:** (அதே நேரம் அங்குவந்து)

அஞ்சியாரே, ஐந்நூறு பணத்திற்கு உம் வீடு ஏலம் போடப் பட்டது. அந்தத் தொகை பெருவேலனாரிடம் கொடுக்கப்பட்டது. இனி நீர் விடுதலை பெறுவீர். உம் மனைவியார் மக்களில்லாத இடம் நோக்கிச் சென்றுவிட வேண்டும்.

(அஞ்சியைத் திறந்துவிடுகிறான். அஞ்சியும் அழகம்மாவும் வருத்தத்துடன் வெளிச் செல்லுகிறார்கள்.)

## 10

(அழகம்மாவும் அஞ்சியும் ஆறாத்துயரோடு அரசமரத்துத் தெரு நோக்கிச் சென்றார்கள். தெருவின் பொதுமக்கள் அனைவர்க்கும் நடந்த செய்தி எட்டுவதாயிற்று. அழகம்மாவின் நிலைக்கு வருந்தினர் சிலர். அவளைத் தொடர்ந்தனர் சிலர்.

சாத்தனுக்குத் தம் அரைக்காணி நன்செய்யை நூறு பணத்திற்கும், கைக்கு வேண்டிய சில தட்டுமுட்டுக்கள் தவிர பிற அசை பொருட்களை ஆணியப்பனுக்கு இருபத்தைந்து பணத்திற்கும் விற்றுவிட்டு வெளிச்செல்லத் தொடங்கினார்கள்.

பார்த்திருந்த ஊரார் பதைத்தார்கள். மாறன் மனைவியும் அஞ்சியின் தங்கையுமான மருதி மண்ணிற் புரண்டழுதாள்.)

**அஞ்சி:** மருதி! அழுவதால் பயன் என்ன? உன் அண்ணியும் பல நாட்களாகச் சொல்லி வந்தாள் சோழநாடு பார்க்க வேண்டும் என்று. சோழநாடு மட்டுமன்றி எல்லா நாடுகளையும் பார்த்து இன்புற எங்கட்கு இப்போது வாய்ப்புக் கிடைத்தது பற்றி மகிழ வேண்டியது

தான். என் மனைவியின் கற்பில் எள்ளளவும் குறை சொல்ல முடியாது என்பது எனக்குத் தெரியும். இஃது அவளுக்கு தெரியும். போம்போது என் மைத்துனர் மாறனைப் பார்க்க முடியவில்லையே என்பதுதான் என் மனக்குறை.

**மருதி:** அண்ணா! ஆள் மேல் ஆள் அனுப்பினேன். வந்துவிடுவார். அவருக்கு நடந்தவைகளில் ஒன்றும் தெரியாது. மேலும் அவர் வந்தால், அவரை அழைத்துக் கொண்டு நானும் உங்களுடன் வந்து விடுகிறேன் அண்ணா, நீங்கள் இல்லாத இவ்வூரில் எங்களுக்குத் தான் என்ன கிடக்கிறது. அறம் இறந்த ஊரில் ஆர்தாம் குடி யிருக்க இசைவார்? உங்கள் மைத்துனர் தம் தலைவர் கட்டளைப் படி அயலூர் சென்றாரோ என்னவோ தெரியவில்லையே.

**அஞ்சி:** தங்கையே, எதற்கும் நீயே ஒருமுறை சென்று உன் மணாளர் வந்துவிட்டாரா பார்த்து வா. அனுப்பிய ஆட்கள் என்ன சேதி கொண்டு வந்தார்கள் அதையும் தெரிந்து கொள்ளலாம் அல்லவா. விரைவில் போ அம்மா, எழுந்திரு.

**மருதி:** இதோ வந்துவிடுகிறேன் அண்ணா.

(போகிறாள்.)

**அஞ்சி:** அழகம்மா உன் அண்ணி வருவதற்குள் நாம் போய்விடலாம். இல்லாவிடில் அவர்கள் நம்மைப் போக விடமாட்டார்கள்.

அங்குச் சூழ்ந்துள்ள மக்களில் ஒருவன் - ஐயா, மாறனார் வந்து விடுவாரே!

ஷை 2: சிறிது நேரம் இருந்து போகலாம் ஐயா!

ஷை 3: அம்மா சிறிது நேரம் காத்திருங்கள்.

**அழகம்மா:** பயனில்லை ஐயா.

(அழகம்மா - அஞ்சி போகிறார்கள். ஊர் மக்களும் தொடர்கிறார்கள்.)

## 11

(அழகம்மா இடுப்பில் ஒரு மூட்டையையும் வலக்கையில் ஒரு செம்பையும் எடுத்துச் செல்ல, அஞ்சி இடது தோளில் ஒரு மூட்டையும் வலக்கையில் ஒரு தடியும் ஆக உடன் செல்லுகிறான்.)

நீர் ததும்பும் நான்கு விழிகள்; கலக்கமடைந்த இரண்டு முகங்கள்; இவைகளை இரக்கத்தோடு பார்த்தபடி, பலர் உடன் செல்லுகிறார்கள்.

(அரசமரத்தடியில் பலருக்கு இடையில் புலம் பெற்றியார் வழக்கு ஆராய்கிறார். இரண்டு கள்வரின் கைகளை ஒன்றாகக் கட்டிப்பிடித்து இழுத்து வருகிறான் மாறன்)

**மாறன்:** நாட்டாண்மைக்காரரே, என் மைத்துனர் காவல் காத்திருந்த களத்து நெல்லை–ஐம்பது கலங்களை – இவர்கள் திருடினார்கள். உளவு, தானே என்னிடம் வந்தது. இவர்களைப் பிடித்துக்கேட்டேன். ஒப்புக்கொண்டார்கள். மேலும் ஆராய்ந்து இவர்களை ஒறுத்தல் செய்ய வேண்டுகிறேன்.

**புலம்பெற்றியார்:** கள்வர் என்று கருதப்படுகின்ற நீவீர் யார்? பெயர் என்ன? இருப்பிடம் எது?

**கள்வன் 1:** என்பேர் வலியன்; வட்டப்பள்ளம் என்னூர்.

**கள்வன் 2:** என்பேர் நெல்லி, வட்டப்பள்ளம்.

(இதற்குள் அஞ்சியும் அழகம்மாவும் அவ்வழியாக வருகிறார்கள். மாறனைக்கண்டு நிற்கிறார்கள்.)

**புலம்பெற்றியார்:** களத்தில் நெல்லைக் களவு செய்ததுண்டா?

**கள்வர்:** ஆம் ஐயா!

**புலம்பெற்றியார்:** எப்போது?

**கள்வர்:** இரவு.

**புலம்பெற்றியார்:** களத்தில் யாரும் இல்லையா?

**கள்வர்:** கயிற்றுக் கட்டிலில் யாரோ படுத்திருப்பது போல் தோன்றவே நாங்கள் துப்பட்டியை நீக்கிப் பார்த்தோம். மாந்தர் எவருமில்லை. மாந்தன் படுத்திருக்கும் அளவு வைக்கோல் குமிந்திருந்தது. நெல்லைக் களவு செய்தோம், ஐம்பது கலம்.

(மாறன், தன் மைத்துனன் அஞ்சியையும் அழகம்மாவையும் பார்த்துப் பதைப்புடன் அருகில் வருகிறான்.)

**மாறன்:** புறப்பாட்டுத் தோற்றம், என்ன அத்தான்? என்ன தங்கச்சி?

**அழகம்மா:** என் கற்பில் ஐயம் கொண்டானாம்.

**மாறன்:** எவன்? எந்தத் தீயன்?

**அழகம்மா:** இதோ வழக்குத் தீர்க்கிறானே இந்த அறிஞன். அதன் பொருட்டு நான் மக்கள் இல்லாத இடத்திற்கு குடி போகத் தீர்ப்புச் செய்தான்.

**அஞ்சி:** அத்தான் நான் இரவு முழுவதும் காவல் காத்திருந்தேன் என்று கூறினேன். அதே நேரத்தில் அண்டை வீட்டு ஆனை, அதே இரவில் அழகம்மாவுடன் யாரோ காதல் விளையாட்டு நடத்தி என் தூக்கத்தைக் கெடுத்தார்கள் என்று கூறினான். புலம் பெற்றியார் இவ்வாறு தீர்ப்புக் கூறினார்.

**மாறன்:** புலம்பெற்றியாரே, புதுமணம் கொண்ட என் மைத்துனர் காவல் இருக்கவேண்டிய நேரத்தில் காதல் தூண்டத் தன் மனைவியிடம் சென்றிருக்கலாம். இதற்குச் சான்று பகரவில்லையா கள்வரின் பேச்சுக்கள். காவல் இருந்தாயா என்றபோது இருந்தேன் என்று இளைஞராகிய என் மைத்துனர் ஒரு பொய் சொல்லியிருக்கலாம். அதற்குச் சின்னாற்றூர் நல்லதொரு குடும்பத்தை இழந்துவிடச் செய்யலாமா? கற்பில் ஐயப்பாடு காட்டி உலகம் பழிக்க வழி செய்யலாமா?

**புலம்பெற்றியார்:** இருந்ததாகச் சேரமன்னர் பேரில் ஆணையிட்டு சொன்னார். என் தீர்ப்புச் சரியானது!

**அழகம்மா:** சரியானது! எவள்மேல் குற்றம் சுமத்தினாயோ, அவளை அழைத்துக் கேட்டாயா!

**அஞ்சி:** அழகம்மா என் பொருட்டுப் பேச்சை அடக்கு.

**அழகம்மா:** ஆம் உங்கள் பொருட்டு. உங்கள் பொருட்டே. நான் கற்புடையவள். நான் கற்பிழக்கவில்லை என்பதற்கு இந்த வானம் இடிந்து விழாமல் இருப்பதும் வையம் மூழ்காதிருப்பதும் சான்றாகும். மக்கள் வாழ்வற்ற இடம் நோக்கிச் செல்லுகின்றோம். நீங்கள் வாழ்ந்திருங்கள். இந்த வாழத் தகாத ஊரில் வாழ்ந் திருங்கள். புலம்பெற்றியார் நாட்டாண்மை செலுத்தும் சிற்றூரில்.

**ஒருவன்:** அம்மா உமக்கு இழைத்த இந்தத் தீமையை நாங்கள் சேர மன்னருக்கு எடுத்துக் கூறி தீர்ப்பை மாற்றச் செய்கிறோம் வருந்தாதீர்கள்.

**அழகம்மா:** அண்ணா! நாங்கள் செல்லுகிறோம். அண்ணியாருக்கும் சொல்லுங்கள் நாங்கள் போய்விட்டதை.

**மாறன்:** அம்மா! உனக்குத் தீமை செய்த சின்னாற்றூரைத் தீக்கிரை யாக்குவேன். அவனது தீர்ப்பை மாற்றி உன்னையும் உன் மைத்துனரையும் அரசினர் மன்னிப்புக் கேட்கவைப்பேன். அதன் பொருட்டு இங்கே நான் வாழ்கிறேன். நீங்கள் செல்லும் இடத்தைச் சொல்லிப் போகவேண்டும்.

**அஞ்சி:** மைத்துனரே, நாங்கள் சோழநாட்டில் காவிரிக்கரையான நல்லிடம் கண்டு தங்க எண்ணுகிறோம். இதைவிட உறுதியாக இன்ன இடம் என்று குறிப்பிட முடியாது.

**மாறன்:** மக்கள் வாழாத இடம்! ஆயினும் உங்கள் குடியேற்றம் மக்கள் நிறைந்த இடமாகவேண்டும்.

(போகிறார்கள், மற்றவர்கள் அழுகிறார்கள்.)

## 12

(அஞ்சியும் அழகம்மாவும் சின்னாற்றூரைக் கடக்குமுன், அண்டை வீட்டு ஆனை எதிர் வரக் காணுகிறார்கள்.)

**ஆனை:** அஞ்சியாரே! அம்மையாரே! இரங்குகிறேன் உங்கள் நிலைக்கு. உங்களுக்கு இத்தகைய கொடிய தீர்ப்பளித்த புலம் பெற்றியாரை நான் வெறுக்கிறேன்.

**அழகம்மா:** நீர் என்னவென்று வழக்கிட்டீர்?

**ஆனை:** அம்மையாரே! "இரவெல்லாம் அஞ்சி தம் புதுமனைவியுடன் ஆடிப்பாடிக் கிடந்தார். அதனால் எனக்குத் தூக்கம் கெட்டு விட்டது. நாடோறும் இப்படி" என்று நான் வழக்கிட்டேன். மேலும், "அஞ்சியார் வீட்டில் இன்றிரவு விடியு மட்டும் நடந்த காதல் பேச்சும், காதல் ஆட்டமும் கூச்சலும் குளறுபடியும் நான் மட்டுமல்ல, இதோ இவர்களும் கேட்டிருந்தார்கள்" என்று ஆரல், வெள்ளி, காடு எனும் மூவரையும் சான்றாகக் காட்டினேன்.

உடனே புலம்பெற்றியார், உண்மைதானா வென்று அம்மூவரை யும் கேட்டார். ஆம் ஐயா என்று அவர்களும் கூறினார்கள். மறுபடியும் புலம்பெற்றியார், "அஞ்சியார் வீட்டில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் இன்னினார் என்று விளக்குங்கள்" என்று கேட்டார். உண்மையில்

இம்மூவரும், உம் வீட்டில் நடந்த ஆரவாரத்தையறிவார்களே தவிர இன்னின்னார் என்று அறியாதவர்களானதால் புலம்பெற்றியாரிடம், ‘அழகம்மாவும் யாரோ ஓர் ஆடவரும் விளையாடினார்கள், இன்னின்னார் என்ற சொல்ல இயலவில்லை’ என்று கூறிவிட்டார்கள். அதற்கேற்றபடி அஞ்சியாரும், தாம் களத்தில் இருந்ததாகவே சேரனார் மேல் ஆணையிட்டும் கூறிவிட்டார்.

எனவே அஞ்சியாரே அப்படிக் கூறிவிட்டதால், நான் புலம் பெற்றியாரிடம், ‘அஞ்சியாரும் அழகம்மாவுமே விளையாடினார்கள்’ என்ற உண்மையை மேலும் கூறி வற்புறுத்த முடியாமற் போய்விட்டது. இத்தனை பெருந் தீமைக்கும் காரணம் அஞ்சியாரின் ஒருபொய்யே! ஆகவே அம்மையாரே! நானல்லன் பழிகாரன்.

**அழகம்மா:** ஐயா அவர்சொன்ன ஒரு பொய்யல்ல காரணம். இத் தீங்கிற்கு அவர் என்மேற்கொண்ட காதல்தான் காரணம். ஆதலால் இத்தீங்கையும் நான் நன்மையாகக் கருதுகிறேன். உங்கள்மேல் வருத்தமில்லை. போய் வருகின்றோம்.

(கண்ணீருடன் ஆனை நிற்க. இருவரும் போகிறார்கள்.)

## 13

(அஞ்சியும் அழகம்மாவும் பாண்டிய நாட்டைச் சுற்றிப் பார்த்தபின், சோழ நாட்டின் பல பகுதிகளைக் கண்டபின், அந்நாட்டுக் காவிரியாற்றின் கரையையடுத்த பெருஞ்சோலை சேர்கிறார்கள்.)

**அஞ்சி:** பெண்ணே! மக்கள் இல்லாத இடம், நம் வாழ்வை நிறுவனம் செய்வதால், புலம்பெற்றியின் தீர்ப்பைப் நிறைவேற்றியவர்கள் ஆவோம்.

கரையளாவிப் பாடிவரும் காவிரி ஆற்றுப் புனலைப் பார்! கரையெல்லாம் மரங்கள்! மரமெல்லாம் பாடும் பறவைகள்!

மலர் கொழிக்கும் மரம் செடி கொடிகள்! எத்தனை வளம்! அழகம்மா, இது காடல்ல தீய விலங்குகள் இல்லாததால்! இயற்கை தந்த பெருஞ்சோலை இன்பஞ் செய்வதால்!

**அழகம்மா:** வாழ்க்கை நடத்தவேண்டியது இங்குத்தான். மக்களில்லாத இடம் வருத்தம் செய்யும். ஆயினும், என்னைவிட இங்கு வேறு பெண்களே இல்லாததால் எனக்கு உங்களால் தொல்லை இராது.

அண்ணாரையும் அண்ணியாரையும் பிரிந்து வாழ வேண்டும். துன்பந்தான். ஆயினும், உங்களுடன் இணை பிரியாமல் இருக்கும் வாய்ப்பை நினைத்தால் இன்பந்தான். காயும் கனியும் கிழங்கும் நமக்கு உணவு. மரநிழல் நமக்கு வீடு. சருகு மெத்தை! இப்படியேதானா?

**அஞ்சி:** மூங்கிலும், தென்னை மட்டையும், நாரும் நாளைக்கே நமக்குப் புதிய வீட்டை இந்தா என்று கொடுக்கும். புல்லரிசிச் சமையல் சில நாட்கள், பிறகு செந்நெல் விளைவிக்கத் தெரியாதா நமக்கு? என்ன இல்லை? முப்பழக் கனியுடன் அப்பட்டத் தேன் கலந்து செய்யும் பழத் தித்திப்பு வேண்டுமா உனக்கு? என்ன கறியில்லை இங்கே?

அதோ தெரிகிறதே ஆற்றோரம் அடர்ந்த கொடி! வா. அதனிடையில் தங்கக் குடங்கள் போல், பச்சை மணிக் குழவிகள் போல் காட்டுகிறேன் தித்திக்கும் வெள்ளரிப் பழங்கள்.

(போகிறார்கள். அழகிய வெள்ளரிப் பழங்களைப் பறித்து அவாத் தீர அருந்தியிருக்கிறார்கள்.)

**அழகம்மா:** அத்தான், முதலில் ஆகவேண்டிய வேலை குடிசை கட்டுவது.

**அஞ்சி:** ஓ! நாளைக்கே அழகாக! இளநீர் பறிக்கட்டுமா! அழகம்மா!

**அழகம்மா:** இந்த ஆலின் நிழலில் சற்று இளைப்பாறலாம். குளிர்ந்த காற்றும் மலர் மணமும் என்னை என்னவோ செய்கிறது! இளநீரும் நறுந்தேனும் நீங்களே எனக்கு.
(ஒருபுறம் படுத்துத் தூங்குகிறார்கள்.)

## 14

(சின்னாற்றூர் (சேரநாடு) சிறப்புச் செய்யப்படுகிறது.)

தெருவெல்லாம் வரவேற்புத் தட்டிகள், தரையெல்லாம் தண்ணீர்த் தெளியல், வீடெல்லாம் பூத்தொங்கள், வீட்டின் உட்புறமெல்லாம் பட்டணிந்து நகையணிந்து சேரனைக் காண அவாவும் பாவையர் பதைப்பு.

நாட்டாண்மைக்காரர் சேரனை எதிர்கொள்ள முந்து கிறார். அவரை ஆதரித்து அவருடன் செல்கிறார் சிலர். அவரை எதிர்த்து முணுமுணுக்கிறார் சிலர்.

நாட்டாண்மைக்காரர் தீர்ப்பளிக்கும் ஆலமரத்தின் எதிரில் ஆராய்ச்சிமணி தூக்கப் பெருந்தூண்கள் நாட்டப்படுகின்றன. நாட்டாண்மைக்காரர் தீர்ப்பைச் சேரனிடம் மறுக்கச் சிலர் கூடுகின்றனர். ஆராய்ச்சிமணிக்கு இடமேயில்லை என்று கூறி நிற்கின்றார் சிலர்.

மணியோசை கேட்கிறது. சேரன் யானை பின்னே வருவதால்! தூள் கிளம்புகிறது. சேரன் படையின் காலால் எழுப்பப்பட்டு! வாழ்த்தொலி வானைப் பிளக்கிறது. முரசொலி வேறு - வெற்றிச்சங்கு வேறு.

வீட்டின் வாயில்களில் எல்லாம் பெண்கள். தெருவெல்லாம் காளையர் கூட்டம். சேரர் ஊருக்குள் நுழைந்துவிட்டார். இதோ நகர்வலம் மாறன் வீட்டின் பதற்றமான பேச்சுக்கள் நிகழ்கின்றன.

மாறன்: சேரன் ஆலடி அமர்ந்தவுடன் நான் ஆராய்ச்சிமணியை அசைப்பேன். என் அருமைத் தங்கைக்குப் புலம்பெற்றி நல்கிய தீர்ப்புத் தீயது என்று மன்னனிடம் எடுத்துக் காட்டுவேன். மன்னன் தெரிந்து மாற்றட்டும். இல்லையேல் என் மறுப்புச் சரியில்லை என்றும் புலம்பெற்றியை இகழ்ந்தது தவறு என்றும், என்னைக் கொலை செய்யச் சொல்லட்டும்.

மருதி: அத்தான்! நீங்கள் புலம்பெற்றி மேல் மன்னரிடம் வழக்குரைக்கா திருக்க உங்களைப் புலம்பெற்றியின் ஆட்கள் அச்சுறுத்தினார்கள். அது ஏன்?

மாறன்: அதுவா? புலம்பெற்றிக்குத் தெரியும் தான் செய்த தீர்ப்பு அறமற்றதென்று.

மருதி: நீங்கள் ஆராய்ச்சி மணியை நெருங்காமல் செய்ய ஆட்களை ஏற்படுத்தியிருப்பாரோ புலம்பெற்றி?

மாறன்: இருக்கட்டுமே!

மருதி: உங்கள் கருத்து ஈடேறாமல் போய்விட்டால்?

மாறன்: அப்படித்தான் என்னை வழியிலேயே கொல்லட்டும்.

மருதி: அதுதான் முடியாது அத்தான்! இதோ பாருங்கள் நீளக்கத்தி, மாற்றுருவோடு நானும் உங்களைப் பின்பற்றி வருவேன்.

மாறன்: மறவர் பெற்ற மணியே! அப்படிச் செய்!

(மருதி முக்காடிட்டுக் கொள்ளுகிறாள். இடையில் நீளக்கத்தியை மறைத்துக் கொள்ளுகிறாள். கிழவி போல் கூனிக் கொள்ளுகிறாள். கையில் தடியொன்று தாங்குகிறாள்)

**மாறன்:** இந்நேரம் சேரன் எல்லா வரிசைகளையும் பெற்று ஆலடியில் அமர்ந்திருப்பான். முன்னே செல்லுகிறேன். பின்னே வா!

(போகிறார்கள்.)

## 15

(ஆலடி நோக்கிக் கிழவி இருபுறமும் உற்றுப் பார்த்தபடி, செல்ல, முன்னே செல்லுகிறான் மாறன். நாவல் மரத்தில் மறைந்திருந்த ஒருவன் மாறன் பின் வந்து சேருகிறான்.)

**மறைந்திருந்தவன்:** எங்கே போகிறீர் மாறனாரே?

**மாறன்:** சேரனிடம் புலம்பெற்றியார்மேல் வழக்குச் சொல்லப் போகிறேன்.

**மறைந்திருந்தவன்:** வேண்டாம் வேண்டாம்! புலம்பெற்றிமேல் சொல்லும் வழக்குப் பொய்யாய் முடிந்தால் சேரமன்னர் பொய் வழக்கிட்டவனுக்குக் கொலைத் தீர்ப்பு இட்டுவிடுவார்.

**மாறன்:** பொய்யாய் முடியாது.

(சிறிது தொலைவில் சென்றபின் அங்கிருந்த மாமரத்திற் பதுங்கி யிருந்த கட்டையன் எதிர்வருகிறான்.)

**கட்டையன்:** என்ன மாறனாரே! எங்கே?

**மாறன்:** என் தங்கை அழகம்மாவின் கற்பு ஐயப்படத்தக்கது என்று தீர்ப்புரைத்தான் புலம்பெற்றி, அது சரியல்லவென்று சேரனாரிடம் சொல்லப் போகிறேன்.

**கட்டையன்:** வேண்டாம் வேண்டாம். புலம்பெற்றி மேல் சேரனார் மிக்க விருப்பம் வைத்திருக்கிறார். அதனால் சேர மன்னரால் உமக்கே பெருந்தீமை விளையும்.

**மாறன்:** என் பொருட்டு அறம் தவறி அழியாப் பழிதேடிக் கொள்வாரா சேரனார்!

(போகிறார்கள்)

(ஆராய்ச்சி மணியை மாறன் நெருங்குகிறான். கிழவியும் உடன் செல்லுகிறாள். ஆராய்ச்சி மணியருகில் நிற்கும் பலரில் குண்டு எதிர் வருகிறான்.)

**குண்டு:** ஆராய்ச்சிமணியை அசைக்கவா போகிறீர்? தலை தப்பாது.

(மாறன் மணியின் கயிற்றைப் பற்றுகிறான். பின்னிருந்து குண்டு, மாறன் தலைநோக்கித் தடியை ஓச்சுகிறான். ஓச்சிய கையின் மேல் கிழவியின் கத்தி பாய்கிறது. குண்டின் கை துண்டாய் விழுகிறது.)

**குண்டு:** ஐயோ.

(உரத்தகுரலில் அலறி வீழ்கிறான். ஆலடி அரங்கில் அமைதி கெடுகிறது. சேரன் கூச்சல் உண்டான இடம் நோக்கி வருகிறான். அவனுடன் புலம்பெற்றியும் பெரிய அலுவல்காரர்களும் வருகிறார்கள். அங்கிருந்து சிலர் சேரனிடம் முறையிடுகிறார்கள்)

1. இவர் ஆராய்ச்சி மணியை அடிக்க வந்தார். இதோ இவர் அவரை அச்சுறுத்தினர்.
2. ஆமாம் அதையும் பொருட்படுத்தாமல் அவர் கயிற்றைத் தொட்டார். தொடவே இதோ இவர் பின்னால் தடியை ஓங்கினார். ஓங்கிய கையைப் பின்னிருந்து வாளால் வெட்டினார் இந்தக் கி ழவியார்.
3. கிழவியார் வெட்ட வில்லையானால் இவர் தலை உடைந் திருக்கும்.

**சேரன்:** யார்மீது உமக்கு வழக்கு?

**மாறன்:** புலம்பெற்றியார் மீது?

**சேரன்:** அப்படியா? நீ ஆராய்ச்சி மணியை அடிப்பதைத் தடைசெய்த இவன் நோக்கம் என்ன என்று நினைக்கிறீர்?

**மாறன்:** அரசே! எனக்கு முறைமை வழங்க வேண்டும். நான் வரும் வழியில் புலம்பெற்றியார் ஆட்கள், புலம்பெற்றி மேல் அரசனிடம் வழக்கிடாதே என்று என்னை அச்சுறுத்தினார்கள். மீறி வந்தேன். இங்கு இவன் புலம்பெற்றி மேல் வழக்குரைத்தால் தலைபோகும் என்றான். கயிற்றைத் தொட்டேன்...

**கிழவி:** பின்னிலிருந்து இவன் தடியை ஓச்சினான். அடி விழுமுன் நான் இந்த வாளால் அவன் கையைத் துணித்து என் மணாளரைக் காத்தேன்.

**சேரன்:** மறவர் மகளிரே! நீவிர் இவர் மனைவியாரா?

**கிழவி:** ஆம் அரசே! என் முக்காட்டை நீக்கிவிடுகிறேன்.

(சேரன் வியப்புறுகிறான்.)

**சேரன்:** எல்லோரும் ஆலடி வாருங்கள்!

(அனைவரும் போகிறார்கள்)

## 16

(ஆலடியில் ஒருபுறம் மாறன் சேரனிடம் தன் வழக்கைக் கூறிக் கொண்டிருக்கிறான். அருகில் ஒருபுறம் கை வெட்டுப்பட்ட குண்டு அலறுகிறான்.)

**குண்டு:** அரசே, புலம்பெற்றியார் என்னை ஆளாக்கி, மாறன் மணியை அசைக்கொணாத வகை செய்ய வற்புறுத்தினார். மாறனார் வழக்குரைத்தால் தம் பிழை தெரிந்துவிடும் என்று புலம் பெற்றியார் நினைத்தார்.

(கூட்டத்திலிருந்து ஆனை கூச்சலிடுகிறார்)

**ஆனை:** அரசே, அஞ்சியாரையும் அவர் மனைவியார் அழகம்மாவை யும் இந்த நாடு இழக்கலாகாது. அழகம்மா கற்புள்ளவர். முறையற்றது புலம்பெற்றியார் தீர்ப்பு.

**சேரன்:** மாறன் முறையீடு கேட்டேன். புலம்பெற்றி சொன்னவற்றைக் கேட்டேன். மற்றும் பல சான்றினர் பகர்ந்தவை கேட்டேன்.

காதல் காரணமாக அஞ்சியார் பொய் கூறினார். புலம்பெற்றியார் அவர் பேச்சைக் கொண்டு, அவர் வீட்டில் இல்லை என்று முடிவு கட்டியதில் தவறில்லை.

ஆனால், தவறாக அழகம்மா கற்பில் ஐயம்கொண்ட புலம் பெற்றி, என் ஆணையின்றி அயல்நாடு கடத்தியது தவறு.

இதனால் என் நாட்டு மக்களை - இருவரை என் பொன்னாடு இழந்தது வருந்தத்தக்கது.

**என் தீர்ப்பு:**

புலம்பெற்றி இன்றுமுதல் தன் வேலையை இழந்துவிடுக. ஊர்க் காவல் பணி ஏற்க. அதன் பொருட்டு அவர்க்குத் திங்கள் ஒன்றுக்கு ஒன்பது பணம் தருவோம்.

ஊர்க்காவலனாகிய புலம்பெற்றிக்கு ஒரு வேலை, என்ன எனில், அழகம்மா அஞ்சி இருவரையும் தேடி, என் ஆணை கூறி அழைத்து வரவேண்டும் அவர் வர ஒப்பாவிடில் அதையும் அவர் கைப்பட எழுதி வாங்கிவரவேண்டும். கணக்கரே! என் ஆணையை எழுதிப் புலம்பெற்றியிடம் கொடுக்க.

**கூட்டம்:** வாழ்க சேரனார்!

(அனைவரும் போகிறார்கள்)

(ஒருபுறமாகப் புலம்பெற்றியும், மாறனும், மருதியும் பேசுகிறார்கள்.)

**புலம்பெற்றி:** மாறனார்க்கல்லவா, தெரியும் அஞ்சியாரும் அழகம்மை யாரும் சென்றுள்ள இடம். அது இன்னதென்று கூறி எனக்கு உதவி செய்யவேண்டும்.

**மாறன்:** புலம்பெற்றியாரே, நானும் உம்முடன் வர எண்ணுகிறேன். காவிரி யாற்றங் கரையோரமெல்லாம் தேட வேண்டும். சோழ நாடுதான் அவருக்குப் பிடித்தமானது என்பது எனக்குத் தெரியும்.

**மருதி:** நானும் வருவேன் அத்தான்.

**மாறன்:** உன்னை அழைத்துப் போக அட்டியில்லை. ஆயினும் உன்னிலை வழி நடக்கக் கூடியதில்லை. கருத் தாங்கியிருக்கின்றாயே?

**மருதி:** அத்தான் மறுப்பதால் பயனில்லை. கருத் தாங்கியிருக்கிறேன் என்ற காரணத்தால் உங்களைப் பிரிந்திருக்க முடியாதென்கிறேன்.

**மாறன்:** அப்படியா?

**புலம்பெற்றி:** வரட்டுமே, நாளை காலை கிளம்பலாமே?

**மாறன்:** ஆம்!

## 17

(சோழ நாட்டுப் பெருஞ்சோலையில் அஞ்சியும் அழகம்மாவும் அமைத்த ஒரு குடிசையின் அண்டையில் மற்றொரு குடிசை கட்டிக் கொண்டிருக்கிறான் அஞ்சி. மாலைநேரம் ஆகிறது. அன்றிரவுக்கான உணவு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாள் அழகம்மா. அழகம்மா அஞ்சியிடம் வருகிறாள்.)

**அழகம்மா:** என்போல் என் அண்ணியாரும் கருவுற்றிருப்பார்களோ என்னவோ தெரியவில்லையே.

**அஞ்சி:** இந்த நிலையில் உன் உள்ளத்தில் எந்தக் குறைபாடும் இருக்கக்கூடாது. என் மைத்துனரும் தங்கையும் கட்டாயம் இங்கு வருவார்கள். இந்த நம்பிக்கையால்தான் அவர்கள் தங்க இக்குடிசை ஏற்பாடு செய்கிறேன்.

**அழகம்மா:** நானுந்தான் அத்தான் நம்புகிறேன். ஒவ்வொரு வேளைக்கும் அவர்கள் இருவரும் கஞ்சிக் குடிக்கத் தேக்கிலைக் கல்லை தைப்பேன். அவர் வராததால் அவ்விரு கல்லைகளையும் நிழலில் உலர்த்தி அடுக்கி வைப்பேன். இப்படி நாள் ஒன்றுக்கு நான்கு விழுக்காடு நம் குடிசையின் பரணையை நிறைத்துவிட்டன.

**அஞ்சி:** எண் கண்ணே! கவலைக்கு இடந்தராதே! கருத்தாங்கிய நீ, தேக்கிலை பறிக்காதே. உன் மேனி நலியும்.

(இதே நேரத்தில் புதுக்குடிசையின் பின்னிருந்து ஒரு குரல் கேட்கிறது.)

**குரல் 1:** நாங்கள் ஒருவகை இனத்தார். முகத்தைக் கறுப்புத்துணியால் மறைத்திருப்போம். கண்ணுக்குமட்டும் பொத்தல் உண்டு. மூவர் வந்திருக்கிறோம். குடிசைக்குப் பின் மறைந்திருக்கிறோம். உங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். எங்களைக் கண்டு நீங்கள் அஞ்சக்கூடாது எதிரில் வரலாமா?

**அழகம்மா:** வரச் சொல்லுங்கள் அத்தான்!

**அஞ்சி:** நீங்கள் வரக்கூடாது. என் மனைவி அஞ்சுவாள். அதனால் அவள் தாங்கியுள்ள கருச்சிதையினும் சிதையும்.

**குரல் 1:** நாங்கள் மிக நல்லவர்கள். அஞ்சவேண்டிய தேவையே ஏற்படாது.

**அஞ்சி:** அப்படியா? - வரலாம்.

(மூன்றுபேர் கறுப்புத் துணியால் முக மூடியபடி எதிர்வந்து நிற்கிறார்கள்.)

**அஞ்சி:** நீங்கள் எங்கிருப்பது?

**குரல் 1:** நாங்கள் இந்த பாங்கில் உள்ள மலை வாழ்நர்.

**குரல் 2:** அதெல்லாம் இருக்கட்டும் ஏன். அண்ணியாரே - அட - ஏன் அம்மையாரே! கருத்தரித்து எத்தனை திங்கள் ஆயின?

**அழகம்மா:** என் அண்ணியார்!

(என்று கூறிக் குரல் 2 ஐத்-தாவி அணைத்துக் கொள்ளுகிறாள்.)

**மருதி:** (தன் முகமூடியை விலக்கி) அண்ணியாரே நலந்தானே.

(இதற்குள் அனைவரும் முகமூடியை விலக்குகிறார்கள். மாறனும் அஞ்சியும் தழுவிக் கொள்ளுகிறார்கள்.)

**அஞ்சி:** என்ன புலம்பெற்றியாரா!

**அழகம்மா:** என் கற்பில் ஐயம் என்ற தீயனா?

**புலம்பெற்றியார்:** அம்மையாரே, சேரனார் ஆணை இதோ இருக்கிறது. உங்களை மக்களில்லாத அயல்நாடு கடத்தியது என்பிழை என்று சேரனார் தீர்ப்புக் கூறினார். அதனால் என்னையும் அவ் வேலையை விட்டு நீக்கினார். நீக்கி எனக்கு ஊர்க்காவற்பணி உதவினார். உதவி, உங்கள் இருவரையும் சேரநாட்டுக்கு அழைத்து வரும்படி எனக்குக் கட்டளையிட்டார்.

என்னை மன்னிக்க வேண்டுகிறேன். புறப்பட வேண்டும் பெற்ற தாய்நாடு நோக்கி.

**அஞ்சி:** புலம்பெற்றியாரே மன்னித்தோம். உம்மால் வருத்தமில்லை. நாங்கள் மீண்டும் சேரநாடு... என்ன உன் எண்ணம் அழகம்மா?

**அழகம்மா:** பெருஞ்சோலை பிடிக்கிறது. எனக்கும் இவ்விடம் விட்டுப் போக மனமில்லை.

**அஞ்சி:** வர விருப்பமில்லை. நீவிர் இரண்டு நாள் தங்கி போகலாம். வழி நடந்த வருத்தம் நீங்கும்.

(அனைவரும் நெடுநேரம் அன்புடன் பேசி உணவு உண்ணத் தலைப்பட்டார்கள்.)

(ஒருபுறம்)

**மாறன்:** மருதி! உன்னிடம் ஒன்று சொல்ல அஞ்சுகிறேன்.

**மருதி:** நான் ஒன்று உங்களிடம் சொல்ல அச்சப்படுகிறேன். அது என்ன் தெரியுமா அத்தான்?

**மாறன்:** நான் சொல்ல நினைப்பது என்ன தெரியுமா மருதி? நாம் இங்கேயே இருந்து விடுவோம்.

**மருதி:** நாம் இங்கேயே இருந்து விடுவோம்.

## 18

(இரண்டு நாட்களின் பின் புலம்பெற்றி அஞ்சியிடம் அஞ்சல் பெற்றுக்கொண்டு போய்விடுகிறான்.

அழகம்மா இரண்டாண் குழந்தை (இரட்டைப் பேறாகப்) பெற்றெடுக்கிறாள். முன்னே பிறந்தவனுக்கு **அஞ்சி மூத்தோன்** எனவும் இரண்டாவது பிறந்த பிள்ளைக்கு **அஞ்சி இளையான்** எனவும் பெயரிட்டு மகிழ்ந்திருக்கையில், மருதி இரண்டு பெண் குழந்தை பெறுகிறாள். **மாறன் முன்னை** எனவும் **மாறன் பின்னை** எனவும் இரு பெண் குழந்தைகட்கும் பெயரிட்டு மகிழ்கின்றார்கள். ஆண்டுகள் இருபத் தொன்றானபின், பெருஞ்சோலையில் இரு திருமணங்கள் நடைபெறுகின்றன. அஞ்சி மூத்தோன் - மாறன் முன்னை என்பாளோடும், அஞ்சி இளையான் - மாறன் பின்னையுடனும் இன்பம் நுகர்ந்து வரும் நாளில்...

அஞ்சி மூத்தோனும் - மாறன் முன்னையும் **அஞ்சி வள்ளை** என்னும் ஒரு பெண்ணைப் பெறுகிறார்கள். அஞ்சி இளையானும் - மாறன் பின்னையும் **மாறன் வாகை** என்னும் ஓர் ஆண்மகனைப் பெறுகிறார்கள்.

பின்னாள் அஞ்சி வள்ளையும் - மாறன் வாகையும் மணவாள ராகிப் பெருஞ்சோலையை ஒரு சிற்றூராக்கிச் சிறப்பாக வாழ்ந்து வரும்போது ஒருநாள் -

தன் பாட்டன்மார் பெயரால் பெருஞ்சோலையில் நினைவுக்கல் நாட்டி விழா நடத்துகிறார்கள். பெருஞ்சோலைச் சிற்றூரில் அஞ்சி என்று பெயர் பொறித்த உயர்ந்த கல் ஒன்றும் மாறன் என்ற கல் ஒன்றும் காட்சி தரலாயின.

இரு கற்களின் அடியிலும் இருவரும் இப்பெருஞ் சோலைச் சிற்றூரை ஆக்கியோர் என்றும், பெருஞ்சோலை மக்களின் முதல் தந்தைமார் என்றும் கல்எழுதி நாட்டினார்கள்.

இதன்பின் ஆண்டுகள் நானூறு சென்றன.

## 19

400 ஆண்டுகளின் பின் -

காவிரியின் வட கரையிலமைந்த பெருஞ்சோலை (வடபெருஞ் சோலைநாடு) நாட்டின் மாறன் திருக்காத்த மன்னனும், மன்னி பூங் குழலாளும் கோட்டை வாயில் கோபுரத்தின்மீது நின்று காவிரியின்

தென்கரையில் அமைந்த பெருஞ்சோலை (தென் பெருஞ்சோலை நாடு) நாட்டின் தொலைக்காட்சியை நோக்குகிறார்கள்.

மாறன் திருக்காத்த மன்னன் சினத்தோடு செப்புகிறான்: “பூங்குழலாளே, பொடியாக்கிப் போடுவேன் தென்பெருஞ்சோலை நாட்டை! வேரற்றுப் போக செய்வேன், அந்நாட்டின் அஞ்சி அழக மன்னனையும் அவன் குடிகளையும்!

**பூங்குழல்:** இடையில் ஆறு ஒன்று இருக்கிறதே? எப்படி நம் படை தென்பெருஞ்சோலை நாட்டை அடையும்?

**மாறன்:** பேதையே நம்மிடம் உள்ள காலாட்படையினர் தொகை ஆயிரம்! நூறு யானை, நூறு குதிரை, நூறு தேர், இந்த நால்வகைப் படையும் அக்கரை அடைய ஐந்துமணி நேரம் போதும், மூன்று நாளில் நாட்டைச் சுட்டெரித்து, மக்களையும் மன்னன் குடும்பத்தையும் இல்லாது செய்து, நம் கொடியை நாட்டி விடலாம். அறந் தவறாது ஆணை செலுத்துகிறானாம். அஞ்சி, மறவழியில் நாட்டை ஆள்கின்றேனாம் நான்.

(அரசன் இப்படிச் சொல்லி முடித்தவுடன், “அனைவரும் உறவினர்” என்ற ஒருகுரல் கேட்கிறது. மன்னனும் மன்னி (அரசி)யும் வியப்பும் அச்சமும் அடைந்தவராய்ப் பல் புறமும் திரும்பிப் பார்க்கிறார்கள். கோபுரத்தின் கீழ்ப்படியில் காவலன் ஒருவனன்றி வேறொருவருமில்லை.)

**அரசன்:** (காவல்காரனை நோக்கி) இங்கு வந்தவர் எவர்? கேட்டது யார் குரல்?

**காவல்காரன்:** அரசே இந்தச் சுவர் பேசிற்று, அனைவரும் உறவினர் என்று.

**மன்னி:** என்ன வியப்பு? சுவர் பேசிற்றா! யார் நம்புவார்கள்?

**மன்னன்:** அனைவரும் உறவினர்! நாமும் தென் பெருஞ்சோலை நாட்டாருமா? இதென்ன மடமை! காவற்காரா! நீதான் அவ்வாறு கூறினாயா?

**காவற்காரன்:** ஐயையோ நானில்லையே அரசே! சுவர்தானுங்க!

**அரசன்:** என்னுடன் வாருங்கள் அரண்மனை செல்வோம்.

(போகிறார்கள். அரண்மனையை நெருங்குகிறார்கள். படைத் தலைவன் எதிர்ப்படுகிறான். அரசன் நடந்தவைகளைக் கூறுகிறான்.)

**படைத்தலைவன்:** சுவர் பேசுகிறதா! காவற்காரனைச் சிறைப்படுத்த உத்திரவு கொடுங்கள்.

**அரசன்:** இவன்தான் கூச்சலிட்டிருக்க வேண்டும், அவன் இன்னான் என்று ஆராயவேண்டும். நாம் துவக்கும் போரை அல்லவா இவன் எதிர்க்கிறான்.

**காவற்காரன்:** நானில்லை படைத்தலைவரே, நானில்லை மன்னவரே.

**மன்னன்:** இவனைச் சிறைப்படுத்துங்கள். படைத் தலைவரே அலுவலகத்தில் என்னை வந்து பாருங்கள்.

(அரசன் மனைவி இருவரும் போகிறார்கள் அரண்மனையின் உட்புறநோக்கி, படைத்தலைவன் காவற்காரனின் தலைப்பாகையை தட்டிவிட்டு அவனின் குடுமியைப் பிடித்து இழுத்துப் போகிறான்.)

**படைத்தலைவன்:** சுவர் பேசிற்றா? உண்மையைச் சொல்லாவிட்டால் உரிக்கப்படும் உன் உடம்பின் தோல்.

**காவற்காரன்:** தோலை உரிச்சிபுடாதிங்க. நீங்க எப்படிச் சொல்லச் சொல்லுறிங்களோ அப்படிச் சொல்றேன்.

**படைத்தலைவன்:** நான் சொல்லிக் கொடுப்பது என்ன இருக்கிறது?

**காவற்காரன்:** சுவர் பேசிச்சிண்ணு மெய்யே சொன்னேன். அப்டி சொல்லாதே. நாங்க ஒன்னே என்னாண்ணு நெனைக்கிறமோ அப்படியே நீயும் சொல்லணும். அல்லாட்டி தோலை உரிப்போம் இண்றின்ங்க. நீங்க என்னே என்னா நெனைக்கிறீங்க? சொல்லுங்க. அந்த மாதிரி சொல்லி விடறேன்.

**படைத்தலைவன்:** அப்படியானால் நீ சொல்வது உண்மை தானா?

**காவற்காரன்:** பொய்யில்லிங்க.

**படைத்தலைவன்:** சுவர் பேசுமாடா?

**காவற்காரன்:** பேசினமாதிரி இருந்துதுங்க. நானு என்னாத்தே கண்டேன்?

**படைத்தலைவன்:** ஒருகால் ‘அனைவரும் உறவினர்’ என்று கூச்சலிட்டுவிட்டு ஓடிவிட்டானா எவனாவது?

**காவற்காரன்:** ஆரைக் கேக்கிறீங்க?

**படைத்தலைவன்:** உன்னைத்தானேடா கேட்க வேண்டியதாய் இருக்கிறது?

**காவற்காரன்:** கேளுங்க பதிலைமட்டும் எங்கிட்ட இருந்து எதிர்பார்க்க வாணாம்.

**படைத்தலைவன்:** ஏன்?

**காவற்காரன்:** தெரிஞ்சாதானே?

**படைத்தலைவன்:** நீ விழிப்போடுதானே அங்கு நின்றிருந்தாய்?

**காவற்காரன்:** அதெப்படி நான் விழிப்போடு இருந்திருக்க முடியுண்ணேன்.

**படைத்தலைவன்:** ஏன்?

**காவற்காரன்:** நேத்து இரவு முச்சூடும் தூங்கிலியே.

**படைத்தலைவன்:** அதனால்?

**காவற்காரன்:** தூக்கத்தோடு நிண்ணுகினு இருந்தேன்.

**படைத்தலைவன்:** எவனோ கூச்சல் இட்டு ஓடியிருக்கிறான். அப்படி இருக்கலாமல்லவா?

**காவற்காரன்:** ஆமாங்க.

**படைத்தலைவன்:** முட்டாளே போ. உன் வேலையை நோக்கி! உன்னை விடுதலை செய்தேன்.

## 20

(படைத்தலைவனால் விடுதலை செய்யப்பட்ட காவற்காரன் மகிழ்ச்சியுடன் தன் வீடு நோக்கி ஓடுகிறான். சில்லிக் குப்பத்தில் அவன் குடிசையில் முல்லை அவனை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறாள்.)

('நான் தப்பிச்சது அருமையடி' என்று காவற்காரன் அவள் கைப்புறத்தில் வீழ்கிறான்.)

**முல்லை:** என்னா அப்டி ஒனக்கு ஏங்கண்ணாளா?

(காவற்காரன் நடந்தவைகளைச் சொல்லுகிறான்.)

**முல்லை கூறுகிறாள்:** அந்த "போர் தடுப்பார் கூட்டத்தின் வேலைக் காரனுடன் நீ இனிமே சேரவேண்டாம். சேர்ந்ததால்தான் 'அனைவரும் உறவினர்' என்ற அறமொழியை நீ அந்த அரசர் எதிரிலும் சொல்லும்படி ஆச்சி அனைவரும் உறவினராய் இருந்தா நமக்கென்னா? அனைவரும் பகைவரா இருந்தா நமக்கென்னா? உலகில் நமக்கு வேண்டியதெல்லாம் இரவு. நீ நான் ஆன கூட்டுறவு; அன்பு மகிழ்ச்சி; அவ்வளவுதான். இனிமே சேரமாட்டியே அவங்கூட.

**காவற்காரன்:** சேர்ந்தா என்ன? நம்ப வாயி நம்ப பேச்செ கேட்டா! இருக்கட்டும் நேரமாச்சி சோறு போடு.
(அதுக்குள்ளே ஒரு முத்தம் ... ... அம்மாடி)

அதே நேரத்தில் ஒரு குரல் - "அனைவரும் உறவினர்."
(மனைவியுடன் சாப்பிடச் சென்ற காவற்காரன் திரும்பிப் பார்க்கிறான்.)

**காவற்காரன்:** அட வந்துட்டியா? என்ன சேதி?

**வந்தவன்:** நல்ல சேதிதான். சாப்பாட்டு நேரம். சாப்புட்டுட்டியா?

**காவற்காரன்:** சாப்பிடப் போனேன். நீ வந்தே. சாப்பிட வாரியா. முல்லே குப்பனுக்கும் சாப்பாடு போடு.
(அவள் உம் என்று இழுத்தபடி சாப்பாடு போட உள்ளே செல்லுகிறாள்.)

காவற்காரன் குப்பன் காதில் சொல்லுகிறான்: முல்லை எதிரில் இனி போர் மறுப்போர் கருத்துக்களையோ அனைவரும் உறவினர் என்ற அற மொழியையோ சொல்லாதே.

**குப்பன்:** சரி.

**காவற்காரன்:** (உரத்த குரலில்) வா குப்பா சாப்பிடலாம்.
(சாப்பிடுகிறார்கள்.)

**குப்பன்:** நான் விரைவில் போகணும். கண்ணாடிப் பாக்கம் இருக்குதே அங்கே ஒரு பெரிய ஆலமரம். மிகப் பெரிசி. அதை வெட்றாங்க (வெட்ணா நடுவிலே - எந்த நடுவிலே? - வெட்றாங்களே அந்த மரத்துக்கு நடுவிலே கோடாலி பாயிலே. டணீங்டணீங்கிண்ணு ஓசை கேக்குது. இப்டி ஓசை கேக்குதுண்ணு நம்ப அரசருக்கு சொல்லி அனுப்பி யிருக்காங்க. அவுரு வந்துதான் மேலே வேலையை நடத்தறதா, மரத்தை வெட்டாமே உட்டுர்ரதாண்ணு முடிவு பண்ணப் போறாங்க. அந்த இடத்துக்கு நம்ம போர் மறுப்பவங்களும் போகப் போறாங்க. என்னை அதுக்காக வெரசா வரச் சொன்னாங்க.

**காவற்காரன்:** அட மரத்துக்கு நடுவிலியா அப்டி ஓசை கேக்குது? என்னாவா இருக்கும்?

**குப்பன்:** அந்த மரத்தின் நடுப்பகுதி கல்லாயி போச்சிண்றாங்க.

**காவற்காரன்:** கல்லாயி போனா வெட்டக் கூடாதா?

**குப்பன்:** அந்தக் கல்லு நெலத்துக்கு உள்ளே தொலவுலே ஊடுருவிப் போயிகினு இருந்தா என்னா பண்றது? எப்டி வெட்றது வெட்னா அடி நெலம் இடிவாங்கிபுட்டா! என்ன ஆவுதோ? இப்டி எல்லாம் கொழப்பிகினு கெடக்கிறாங்க. ஊர் மக்கள் அல்லாரும் அங்கேதான் ஒரே கூட்டம் கடலாட்டம்!

**முல்லை:** அப்டிண்ணா நாம்பளும் போவலாமா?

**காவற்காரன்:** போனா போவுது.

## 21

(வானை அடைத்த தழை மிலாறுகளையும், யானை இருநூறு தங்கும் நிழல் தரும் நிலைமையையும், பத்துப் பேர் கைகோர்த்து அணைப்பினும் அடங்காத பருமனையும் உடைய ஆலமரம், ஆயிரம் ஆட்களால் வேர் கல்லப்படுகிறது. வேர் அனைத்தும் வெட்டப்பட்டது. மரம் சாய்க்க முடியாத நிலைமையில் அசையாது நிற்கிறது.)

அரசன், அமைச்சன், முதலியவர்களும் பார்க்க வந்த பெருங்கூட்ட மக்களும், பதினாயிரக் கணக்கானவர்.

நடுமரம், பல கோடாரிகளால் வெட்டப்படுகிறது. ஒரு பாதி வெட்டியாயிற்று. இனிக் கோடரி பாயாது என்று கூறுகிறார்கள் ஆட்கள். கோடரியைப் பாய ஒட்டாது செய்வது கருங்கல் என்றனர் பல்லோர். இல்லை இல்லை இரும்பு என்றனர் பலர். வயிரம் என்கிறார்கள் மற்றும் பலர்.

ஆராய்ச்சியாளர் நடுப்பகுதியைத் தொட்டும் தடவியும் கடித்தும் நகத்தால் சுரண்டி நக்கியும் பார்க்கிறார்கள்.

கருங்கல்!; ஆம் கருங்கல்! ஆனால் ஆல மரத்தின் நடுவில் கருங்கல் – அதிலும் இத்தனை நீளக்கல் எப்படி வந்தது? அந்தக் கல் நிலத்தின் அடிமட்டத்தை ஊடுருவிச் செல்கிறது – ஒன்றுமே புரியவில்லை; யாருக்கும் புரியவில்லை.

போர் மறுப்போர்களில் ஒருவர் இன்னும் உற்று நோக்குகிறார்.

**அரசர்:** பெரியாரே. இன்னும் என்ன பார்க்கிறீர்? மற்றவர்கட்குப் புரியாதது உமக்கு மட்டும் புரிந்துவிடுமா என்ன?

**பெரியார்:** இயற்கை. சிலர்க்கு தன் உண்மையைக் காட்ட முன்வருவதுண்டு.

**அரசர்:** என் தீர்ப்பு! இம்மரத்தை வெட்ட வேண்டாம். இனி அது பிழைத்தால் பிழைக்கட்டும். செத்தால் அதன் உண்மைதானே புலப்படும் பார்த்துக்கொள்வோம்.

(அனைவரும் பலவாறு பேசிப் போகிறார்கள். பெரியார் மட்டும் இன்னும் தம்மிரு கண்களையும் நடுமரத்தில் உருட்டிக் கொண்டிருக்கிறார்.)

## 22

(காவிரியாற்றின் புனல் நெளிவில் மிதக்கும் ஒளியை, மாலைக் கதிரவன் கையோடு கொண்டு போய்க் கொண்டிருந்தான் மேற்றிசை நோக்கி!

கரையோரத்துச் சோலை மரங்களும், மலர்க்கொடிகளும் இருளைத் தழுவத் தொடங்கின.)

முல்லை சிரித்தபடி இருந்தது. வண்டின் பாட்டு ஓய்ந்த பாடில்லை.

வீடு செல்லுமுன் மாடுகள் துறையில் இறங்கி நீர் குடித்தன. மேய்ப்பவர்கள் அவைகளின் உடலைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தார்கள் பாடியபடி.

கணகணவென்று சிறு குருவிகள் குரலினிமை காட்டித் தம் கூடுகளை அணுகின.

காவிரியாற்றின் வடகரையில் புதர்ப்பூக்கள் மொய்த்த துறையில் பொன்னாவிரையும் அவள் தோழி தேன்மொழியும் நீரள்ளி அருந்துகிறார்கள்.)

**தோழி:** பொன்னாவிரை அக்கரையைப் பார்!

**பொன்னா:** அழகிய அன்னப் படகு! துடுப்பு வலிப்போர் இருவர். ஒளி படைத்த முகமும், வலிபடைத்த தோளும் அமைந்த ஓர் காளை! தேன்மொழியே அந்தக் காளையின் இடையில் மின்னும் வாள், அவனை ஒரு போர் மறவன் என்று சொல்லுகிறது. அதோ பார்! அந்த அழகியோனைச் சுமந்துபோகக் கரையில் குதிரை கட்டப்பட்டிருக்கிறது. தோழி! தோழி! நம்மை நோக்கி வருகிறது. அந்தப் படகு. ஆறு ஓட்டமில்லாதிருக்கிறது. இக்கரைக்கு வந்து சேரவும் கூடும் அந்தப் படகு.

வேடிக்கை பார்க்கலாம் சிறிது நேரம். பறித்த பூக்களை நாரில் தொடுத்தபடி இந்தப் பாறையில் அமர்ந்திருப்போமா?

**தோழி:** நம் பல்லக்குக் காத்திருக்கிறது. செங்கதிர் இருளை அனுப்புகிறது. சிறிதுநேரம் தங்குவோம். பொன்னாவிரை: விரைந்து வருகிறது படகு! இக்கரைக்கு.

(தோழியும் தலைவியும் பூத் தொடுத்தபடி பாறையில் அமர்ந்திருக்கிறார்கள், கீழ்க் கண்ணால் படகைப் பார்த்தபடி!

தென் பெருஞ்சோலை நாட்டுப் போர் மறவனான பரிமேலழகன் 'பொன்னாவிரையை நோக்குகிறான். அவனின் படகு இக்கரையை அடைகிறது. அவன் துறையில் இறங்க வேண்டும் என்பதை மறந்து விடுகிறான். நெஞ்சும் விழிகளும், அவளின் அழகைப் பருகியபடி இருந்தன.

இறங்கப் போறீங்களா? - இது படகு ஓட்டிகளின் பேச்சு.

(பரிமேலழகன் இறங்குகிறான்.)

**பரிமேலழகன்:** பெண்மணிகளே, முயற்காது வெற்றிலைம் துளிர் ஒரு கட்டு வேண்டி வந்தேன். அருகில் இருந்தால் காட்டுங்கள். பறித்துக் கொள்ளுகிறேன்.

**பொன்னாவிரை:** தென்பெருஞ்சோலை நாடுதானே உங்கள் தாய் நாடு?

**பரிமேலழகன்:** இருந்தால் என்ன?

**பொன்னாவிரை:** முறைதவறாது ஆட்சி நடக்கும் நாடு அது.

**பரிமேலழகன்:** தேவையில்லாத ஆராய்ச்சி!

**பொன்னாவிரை:** எங்கள் நாடு முறை தவறி ஆளப்படுவது!

**பரிமேலழகன்:** இரண்டு அரசர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் கருத்து வேறுபாடு; வாய்தவறி வந்த பேச்சுக்கள்.

**பொன்னாவிரை:** அரசர்க்குள் கருத்து வேறுபாடு! ஆம் அரசர் வேறு குடிகள் வேறு என்பதுண்டா? தோழி விரைவிற் சென்று அவர்கள் கேட்ட முயற்காது வெற்றிலைத் துளிர் ஒரு கட்டுப் பறித்து வா! இவர்கள் பகைநாட்டார்தாம். என்றாலும், விருந்தாக வந்தவர்கள். (தோழி போகிறாள்)

**பரிமேலழகன்:** இரவு தொடங்கிவிட்டது. உங்கட்குப் பல்லக்குக் காத்திருக்கிறது. நான் இக்கரையில் இன்னும் இருப்பதை என் ஓடக்காரர்கள் வியப்போடு நோக்குகிறார்கள். முதியோரும் இந்நேரத்தில் இங்குக் காலங்கழிக்கக் காரணமில்லை. ஏற்ற இளம் பருவத்தினர் நாம், குழி உள்ள தட்டிலிட்ட இரசத் துளிகள் போல் - தனிமையாகப் பேசியிருக்கிறோம். மற்றவர்கள் கண்டால் என்ன நினைப்பார்கள். பகை நாட்டானிடம் பேசியிருந்தாள் என்ற பழி உங்கட்குக் கிட்டுமே என்பதை நினைத்தால் அஞ்சாத என் மற உள்ளமும் அச்சத்தால் திடுக்கிடுகிறது. வெற்றிலைத் துளிர் வேண்டாம் நான்...

(தன் கையால் போகிறேன் என்று குறிக்கிறான். அவள் பதைக்கிறாள்.)

**பொன்னாவிரை:** ஆம் ஆம். அப்படியானால் இந்தப் பாதிரி மரத்தின் சரிந்த கிளைப்புறத்தில் பதுங்கி நில்லுங்கள்.

**பரிமேலழகன்:** இல்லை இல்லை பிறர் பழியை ஆவலோடு காணக் காத் திருப்பது இந்த உலகம். அதன் பார்வை பாதிரியின் கிளையையும் அதன் தழையையும் ஊடுருவிப்பாயும் வன்மையுடையவை.

**பொன்னாவிரை:** நான் உங்களுடன் பேச ஒத்துக் கொண்டதும் தவறு. நாமிருவரும் இத்தனை நாழிகை ஒரே இடத்தில் நின்றதும் பழிப்புக்கிடமானது. எங்கள் நாட்டின் மறமன்னர் உங்கள் நாட்டின் மன்னரையும் குடிகளையும் வேரறுக்க நினைக்கிறார். உங்கள் அரசரும் அப்படி, ஆதலால் நாமிருவரும் உருக்கி வார்த்தாலும் ஒன்று சேரமாட்டாத இரண்டு உயிர் - இரண்டு வெவ்வேறான உடல்கள், என் கைப்புறத்தில் வந்து பதுங்கிக் கொள்ளுங்கள். என் மேலாடையால் மூடிக் கொள்ளுகிறேன்.

தன் இருகைகளாலும் அவனை ஏந்தி அழைக்கிறான்.

**பரிமேலழகன்:** அப்படியானால் உலகினர் கண்களை மறைப்பதுதான் உங்கள் நோக்கமா?

**பொன்னாவிரை:** பின்னென்ன?

**பரிமேலழகன்:** என்னை வெறுப்பது ...

**பொன்னாவிரை:** உங்களை நான் வெறுப்பது என் உயிரை வெறுப்ப தல்லவா?

**பரிமேலழகன்:** என் போலத்தானா நீங்களும்?

(இருவரும் இறுகத் தழுவி ஈருடல் ஓருயிராகக் காட்சி யளிக்கிறார்கள்.)

**பொன்னாவிரை:** மணவாளரே, என் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள். என் வீட்டுக்கு வாருங்கள். நம் திருமணத்தை இந்நாட்டுப் பெரியார் பாராட்டுவார்கள். என் அண்ணன் என் நிலைக்குப் பெருமை அடைவார்.

**பரிமேலழகன்:** கண்ணே, அது தக்கதன்று. என் படகில் ஏறிக்கொள். தோழியிடம் உன் பெற்றோருக்குத் திருமணச் செய்தியைச் சொல்லியனுப்பு. அவர்கள் என் நாட்டிற்கு வருவார்கள். வந்து நம்மை அவர்கள் வாழ்த்திச் செல்லுவார்கள்.

(தோழி வெற்றிலைக் கட்டுடன் வருகிறாள்.)

**பொன்னாவிரை புகல்வாள்:** தோழி, என் அண்ணனிடமும் பெற்றோ ரிடமும் கூறிவிடு. நான், காவிரிக்கரையில் தென்பெருஞ்சோலை நாட்டின்... **பரிமேலழகன்:** பரிமேலழகனை... **பொன்** - மணந்து கொண்டேன் என்று,

**பரிமேலழகன்:** தென்பெருஞ்சோலைநாடு திருவயின் பெருந்தெரு என் முகவரி.

இதைக் கேட்ட தோழி கண்ணீர் வடித்து, தொடுத்து வைத்திருந்த மாலையைப் பொன்னாவிரையிடம் தர, அவள் தன் மணவாள னுக்கு அணிகிறாள்; மற்றொரு மாலையைப் பொன்னாவிரைக்கு அவன் சூட்டுகிறான். அன்னப்படகு ஆற்றில் நடக்கிறது, மணமக்களைச் சுமந்து.

## 23

தென்பெருஞ்சோலைநாட்டில் ஒரு வீட்டில் ஊர் பெருமக்கள் கூடியிருக்கிறார்கள். மணமுரசு முழங்குகிறது. இன்னிசை முழங்குகிறது. பொன்னாவிரையும் பரிமேலழகனும் கை கோத்தபடி மன்றில் வரக் காத்திருக்கிறார்கள். எதிர்பார்த்தபடி தென்பெருஞ் சோலை நாட்டு அஞ்சி மன்னன் தேரினின்று இறங்கி மன்றைச் சிறப்புச் செய்ய வந்து சேர்கிறான், தன் குழாத்தோடு,

பெருமக்கள் அரசருக்கு வாழ்த்துக் கூறி வரவேற்கிறார்கள்.

மன்றம் அமைதி பெறுகிறது. மணமக்கள் மன்றில் வந்து அரசருக்கும் பெருமக்கட்கும் வணக்கம் செய்கிறார்கள். அரசர் அமர்க என்று கூற, மணமக்கள் ஒருபால் அமர்கிறார்கள்.

மணமகள் எழுந்து, "மன்னரே, பெருமக்களே! நான் பரிமேலழகரை மனமாரக் காதலித்தேன். அதன் பயனாக அவரை நான் மணந்து கொண்டேன். எங்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்."

('வாழ்க' என்று அனைவரும் வாழ்த்துகிறார்கள். மணமகள் சார்பில் ஒரு முதியவர் பேசுகிறார்.)

மன்னரே, பெருமக்களே! மணமகள், வடபெருஞ்சோலை நாட்டு மன்னனின் முன்னாள் படைத்தலைவர் முத்தானார் மகளார்! அவர் பெயர் பொன்னாவிரையார், ஒரு நாள் தம் நாட்டின் காவிரிக் கரையிலே தோழியுடன் ஆடியிருந்தார். அன்னப் படகேறி ஆற்றில் உலவிய நம் பரிமேலழகரைக் கண்டார். இருவரும் நெருங்கினார்கள். பொன்னா விரையார் அவர் மேல் காதல் கொண்டார். அக்காதலின் பயனாக அவரை மணந்துகொண்ட பொன்னவிரையாரை நான் உங்கள் சார்பாக வாழ்த்து கிறேன், அவர்கள் நன் மக்கள் பெற்று நல் வாழ்வு வாழ்க என்று.

(அனைவரும் அவ்வாறே என்று ஆரவாரித்தனர். பரிமேலழகர் எழுந்து வணங்கிக் கூறுவார்.)

நான் பொன்னாவிரையார் மீது காதல் கொண்டேன். அதன் பயனாக அவரை மணந்து கொண்டேன். அரசரும் பெருமக்களும் எம்மை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

(அனைவரும் வாழ்க என்று கூறுகிறார்கள்.)

அஞ்சி மன்னர் எழுந்து அறிக்கை செய்கிறார்.

பெருமக்களே! மணமகனார் என் முன்னாள் படைத்தலைவர் செந் தோளர் மகனார். அவர் இன்று என் காலாட் படையில் நூற்றுவர் முதலி (நூறு காலாட்களின் தலைவர்) அவர் காவிரிக்கரையில் பொன்னா விரையார் மேற் காதல் கொண்டதின் பயனாக, நிகழ்ந்த இத் திருமணத்தை வாழ்த்துகிறேன், உங்கள் சார்பில், நல்வாழ்வு பெறுக! நன்மக்கள் பெறுக!

(அனைவரும் அவ்வாறே ஆகுக என்று ஆரவாரிக்கின்றனர். இன்னிசையும் மணமுரசும் எழுகின்றன. அதன் பிறகு ஆடல் பாடல் கண் காதுகட்கு இன்பம் பயக்கின்றன. பற்பலவகைப் பண்ணியங்களும்

பழவகைகளும் அறுசுவையுணவும் பரிமாறிய தலைவாழையிலைப் படையல் நோக்கி மக்களும் அரசரும் அழைக்கப்படுகிறார்கள்.

உணவு முடிகிறது; அடைகாய் தருகிறார்கள். அவரவர் தம்மில் கூடிப் பேசுவாரும் குந்தி உறங்குவாரும் ஆனார். மாலை நேரம் தலைகாட்டிற்று தென்றல் தன் இனிமை காட்டி உலவிற்று. முல்லை, தன் நறுமண முரசால் சோலைக்கழைத்தது உலகினரை.)

## 24

சோலையில் ஒருபால் பரிமேலழகனும், அவன் மனைவி பொன்னாவிரையும் பொன்னூசல் ஆடியிருக்கிறார்கள். பொன்னா விரை தன் காதலனின் தோளில் சாய்ந்தபடி பொன்னூசலின் அசைவின் இனிமையைப் புகழ்வதும். அவனைத் தொட்டுப் பயில்வதால் ஏற்படும் இன்பத்தை நுகர்வதுமாயிருக்கிறாள். அவள் பேசுகிறாள். கிளிகள் தலைசாய்த்து உற்றுக் கேட்கின்றன. குலுக்கென்று நகைக்கிறாள். தம் இனம் என்று குயில்கள் அணுகுகின்றன. அவள் கண்களைக் கருநெய்தல் மலர் என வண்டுகள் அண்டும்.

சோலையில் மற்றொரு பால், பொன்னாவிரையின் அண்ணன் நன்னன், யாழ்மிழற்றி இசையின்பத்தைப் பெருக வைக்கிறான். சுற்றிலுமுள்ள தன் தோழரையெல்லாம் அதைப் பருக வைக்கிறான்.

அவன் யாழிசையுடன், தன்குரல் கலக்கப் பாடுகிறான். தோழர் சிலர் ஆடுகிறார்கள்.

மற்றொருபால், பரிமேலழகனின் தங்கை பச்சைமயில் தன் வளர்ப்பு மான் குட்டிக்குத் தண்ணீர் காட்டுகிறாள், காவிரிக் கரையில் ஒரு துறையில்.

மான்குட்டி நீர் குடிக்கிறது. பச்சை மயில் அதன் உடலைத் தடவிக்கொடுத்துக் கொண்டு நிற்கிறாள். பொல்லாத மான்குட்டி, சொல்லாமல் ஒருபுறம் குதித்துக் குதித்து ஓடுகிறது. அதன்துடுக்குத் தனம் பச்சை மயிலுக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. அவள் அதனோடு ஓடுகிறாள், காற்சிலம்பு கலகல என்று ஒலிக்க

ஒரு புன்னை மரத்தடியில் மான் குட்டி ஓர் இன்னிசை கேட்டு நின்று விடுகிறது. மரத்தின் பின்புறமே வந்து மான் குட்டியைப் பற்றிக்

கொள்ள முயலுகிறாள் பச்சை மயில், ஆயினும் அம்முயற்சியில் சென்ற தன் எண்ணம் தடுக்கி, அங்கு எழும் இன்னிசையில் விழுகிறது.

மிழற்றுவோன் யார்? - அவள் கண்கள் தேடுகின்றன. எடுத்த அடி இடையசைய யூன்றி, மற்றும் சிறிது தொலை செல்கிறாள். ஐந்தாறு தோழர்கட்கு நடுவில் ஓர் ஆணழகு கொலுவிருக்கக் காணுகிறாள்.

நன்னனின் வலக்கை விரல்கள் இசை எழுப்ப, இடது கையின் விரல்கள் நரம்புதோறும் ஓடி அவ்விசையைப் பண்படுத்துகின்றன. அவன் முன்னுதடு அசையக் கடையுதடு புன்னகையைச் சொரிகிறது. வானிடை மிதக்கும் பாடலின் செந்தமிழ்!

**பாட்டு**

எடுப்பு

**பொழுதுமலர் மணம் மருவி - நம்மேல்**
**ஒழுகும் தென்றல் அருவி! (பொழுது)**

உடனெடுப்பு

**பொழிலிடைத் தழை யெலாம் அசையப்**
**பொன்னிறப் பறவைமெய் சிலிர்க்கப் (பொழுது)**

அடி

**எழுதஓர் உருவிலாக் காற்றால் - நமக்**
**கின்பமே தன்குளிர் ஊற்றால்;**
**கழைமொழி மங்கைமலர் உறவும் - குளிர்**
**காற்றுக்கு நிகரில்லை அன்றோ? (பொழுது)**

பச்சை மயில், பாட்டின் கருத்திலும் பாடும் பாணியிலும் சொக்கும்போது மான் குட்டியின் செய்கை குளறுபடி உண்டாக்கி விடுகிறது. அது துள்ளி ஓடி நன்னன் எதிரில் சென்று அவனின் முகத்தோடு தன் முகத்தைச் சேர்க்கிறது.

நன்னன் சிறிது தொலைவில் நிற்கும் தங்கப் பாவையைக் காணுகிறான். அவள் தோற்றத்தில் வியப்படைகிறான். அவளை அவன் விரும்புகிறான். தன் விருப்பத்தை அவளிடம் கூற வழி தேடுகிறான். அந்த மான்குட்டிக்கு ஒரு முத்தம் கொடுத்துப் பச்சை மயிலை ஏறிட்டுப் பார்த்தான்; அப்போது அவளின் தாமரை முகத்து நடுவில் முல்லைப் பல் அழகு நகையை ஒழுகவிட்டது.

நன்னன் தான் மேற் போர்த்திருந்த பட்டுப் போர்வையை எடுத்து மானின் கழுத்திற் கட்டுகிறான்; மானைஅடிமைப் படுத்த நினைப்பவன் போல் வெளிக்குக் காட்டி அதைப் பச்சை மயிலிடம் போம்படி செய்கிறான்' அதுவும் அஞ்சி ஓடுகிறது பச்சை மயிலிடம்.

**பச்சைமயில்:** (மானை அணைத்து) உன் கழுத்தை இறுக்கி விடாது

என்று மேல்வேட்டியை அவிழ்த்துத் தன் மார்பில் ஒற்றுகிறாள், அவள், அவனை ஒரு பார்வை பார்த்து.

நன்னன் விழிகள் இன்பத்தை நுகர்ந்தன. தன் மேற்போர்வையுடன் தன்னை நோக்கி இரண்டடி எடுத்து வைத்த பச்சைமயிலை எதிர் கொண்டோடித் தன் வேட்டியைப் பெற்றுக் கொள்ளுகிறான்.)

**நன்னன்:** பொன்னாவிரையின் அண்ணன் நான்!

**பச்சைமயில்:** பரிமேலழகர் தங்கை நான்.

**நன்னன்:** கருத்து?

**பச்சைமயில்:** வேறுபாடில்லை.

**நன்னன்:** நான் பெற்ற பேறு!

**பச்சைமயில்:** எனவே?

**நன்னன்:** நான் உங்கள் காணிக்கை!

**பச்சைமயில்:** என் காதல் என்னை உண்ணப் படைக்கிறது தங்கள் பால்.

**நன்னன்:** மான்குட்டி ஓடுகிறது.

**பச்சைமயில்:** ஆம்.

(இருவரும் சேர்ந்து ஓடுகிறார்கள் மான்குட்டியுடன். மான்குட்டி ஓர் மரத்தின் அடியில் நிற்கிறது. நன்னனும், பச்சையும் நாற்புறமும் நோக்குகிறார்கள்.)

**பச்சைமயில்:** இந்த மான்குட்டி நம்மை உற்றுப் பார்த்தபடி நிற்கிறது.

**நன்னன்:** நாம் நுகரும் இன்பத்தின் உண்மையை அது அறியாது. தனக்கு இன்றுமுதல் இரண்டு பேர்வழிகள் தலைவர்கள் என்று அது நினைத்துக் கொள்ளுகிறது.

**பச்சைமயில்:** நம் திருமணச் செய்தியைப் பெற்றோரிடம் கூறவேண்டும்.

**நன்னன்:** ஆம்! உடனே மற்றொரு திருமண வாழ்த்து! போகலாம்.

**பச்சைமயில்:** உங்களுடன் வர எனக்கு நாணமாய் இருக்கிறது. எங்கள் வீட்டில் என் தம்பி என் தங்கை இருக்கிறார்கள் ஆதலால்.

**நன்னன்:** என் வீட்டிலும் எனக்கு ஒரு தம்பியும், தங்கையும் இருக்கிறார்கள் - அவர்கள் எதிரில் மணக்கோலத்துடன் செல்ல எனக்கும் மனம் ஒப்பவில்லை.

(இருவரும் தனித்தனியே தத்தம் பெற்றோரை நோக்கிச் செல்லுகிறார்கள். மான்குட்டி, யாருடன் செல்வது என்ற எண்ணத்துடன் நின்று தயங்குகிறது.)

## 25

(வடபெருஞ் சோலை அதிர்கிறது. போர்முரசு முழங்குகிறது. யானை ஓட்டுவோர் பலர் போருடையுடன் தம் தம் யானையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஐந்நூறு யானைகள் அணி வகுத்து நிற்கின்றன. ஒருபுறம் ஐந்நூறு குதிரைகள் தத்தம் தலைவரைச் சுமந்தபடி வரிசை பெறுகின்றன. ஐந்நூறு கொண்ட தேர்ப்படை, பெருவீதியை அழகு செய்கிறது.

படைவீடு நிறைந்த வாள்களும் வேல்களும் போர் மறவர்களால் எ( ங்கப்படுகின்றன. கணகணவென்று ஓசை வானைப் பிளப்பன.

தெருக்கள் சிறப்புச் செய்யப்படுகின்றன. முதியோர் தம் மக்களைப் போருக்குப் போகுமாறு தூண்டுகின்றார்கள். புதல்வர்கள், வீழ்க, தென்பெருஞ்சோலை! வாழ்க, வடபெருஞ்சோலை! என்று வாய்விட்டு முழக்கஞ் செய்கிறார்கள்.

சிறுவர் சிறுமியர் பகைப்படை, நாட்டுப்படை என அணி வகுத்துப் பொய்ப் போர் விளைத்து மகிழ்ந்து விளையாடுகிறார்கள்.

மகளிர் போர்க்குப் போகும் படை வரிசைக்கு வாழ்த்துக் கூறத் தத்தம் வீட்டு வாயிலிலும் மாடியிலும் நிற்கிறார்கள்.

காலாட்படையைச் சேர்ந்த மறவர் வாள் தொங்கும் இடைக் கச்சோடு தம் பெற்றோர் பால் விடை பெறுகிறார்கள்.

நன்னன் தன் தனியறையில் தலைப்பாகையணிந்து சட்டை யிட்டுக் கச்சிறுக்கிக் கத்தியணிந்து இடக்கையில் பலகையேந்தித் தன் பெற்றோரிடம் தாழ்வாரத்தில் வருகிறான்.

தாழ்வாரத்தில் முத்தானார்ஆகிய முன்னாட் படைத் தலைவர் ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கிறார். அருகில் அவர்தம் கிழ மனைவி காட்சியளிக்கிறாள்.)

**நன்னன்:** தந்தையே! அன்னையே, எனக்கு வாழ்த்துக் கூறுங்கள்.

**முத்தானார்:** வெற்றியோடு திரும்புக.

**தாய்:** விழிப்போடிரு. வெற்றியோடு திரும்பு. தம்பி! உன் மனைவியிடம் விடைப்பெற்றுப் போருக்குப் போய் வா. அவள் கருவுற்றிருக் கிறாள்; உன்னைப் பிரிய வருந்துவாள். தேறுதல் கூறு.

**முத்தானார்:** குழந்தாய் இந்த வடபெருஞ் சோலை நாட்டுக்கு நான் படைத் தலைவனாயிருந்து பெருந்தொண்டு புரிந்துள்ளேன். தம் திருக்காத்த மன்னர் என்னைப் பாராட்டாத நாள் இல்லை. நான் பெற்ற புகழை நீயும் பெறுக! நம் தலைமுறையைப் புகழுள்ள தாக்கு! வெற்றித்தார் புரள மீள்க.

(நன்னன் பணிந்து போகிறான்.)

(நன்னன் மனைவி தன் தோழியுடன் மணவாளனை எதிர் நோக்கியிருக்கிறாள். மகிழ்ச்சிதானே? - என்ற குரல் காட்டியபடி நன்னன் தன் மனைவியின் எதிரில் வந்து நிற்கிறான்.)

**பச்சைமயில்:** வருக, நூற்றுவர் முதலியாரே! உங்கள் போல் ஓர் ஆடவனை என் கருவில் நீங்கள் தோற்றுவித்தீர்கள். அதனால் நீங்கள் போருக்குத் துணிவுடன் செல்லுகிறீர்கள். வெற்றியுடன் திரும்பு வதில் விழிப்புடன் இருங்கள். ஏன்? உங்களுக்கு ஒன்று நேர்ந்தால் -

**நன்னன்:** ஆம் தெரியும். நானிறந்தால் நீ யிறக்க நேரும். உன் வயிற்றிலுள்ள மறச் சிறுவன் அல்லது மறச் சிறுமி இறக்க நேரும். வெல்க என்று வாழ்த்து. மீள்வேன் நீ மகிழ்வாய். நம் கைப்புறத்தில் குழந்தை சிரித்து விளையாடும்.

**பச்சைமயில்:** வெற்றியோடு திரும்புக மணாளரே.

(நன்னன் கட்டியணைத்து முத்தம் தந்து போகிறான் பச்சைமயில் கண்ணீரோடு கணவனின் பின்னழகு பார்த்தபடி நிற்கிறாள்.)

## 26

(வடபெருஞ்சோலை நாட்டின் குறுங்காட்டினடுவிலுள்ள ஆலடியில் பெரியார் கிளிச்சிறை நடுவீற்றிருக்கிறார். மற்றும் அறிஞர் ஆறு பேர் பக்கலில் அமர்ந்திருக்கிறார்கள்.

அந்த ஆலமரத்தின் நடுவில் தட்டுப்படும் கருங்கல் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியவில்லையா என்றார் பெரியார் கிளிச்சிறை.)

**அறிஞர் 1:** கல் ஒன்று அல்ல, இரண்டு.

**அறிஞர் 2:** கற்கள் மேடு பள்ளமின்றி வேலைதீர்ந்தவை என்று தோன்றுகிறது.

**அறிஞர் 3:** ஆராய்ச்சி, கைவிடப்பட்டதா?

**அறிஞர் 4:** இல்லை ஆட்கள் வேலை செய்கிறார்கள். ஆலமரம் வெட்டப்படுகிறது. மூன்றடி நீளத்தில் கற்கள் இரண்டும் இப்போது காட்சியளிக்கின்றன.

**அறிஞர் 5:** கற்களின் பருமன் என்ன?

**அறிஞர் 6:** மூன்றடிக்கு மூன்றடி.

**அறிஞர் 1:** உயரம்?

**அறிஞர் 2:** கண்டவர் யார்? காணுவதற்குத்தான் முயற்சி நடக்கிறது.

**அறிஞர் 3:** மண்ணுக்குள் புதைந்துள்ளபகுதி எவ்வளவு இருக்கலாம்?

**அறிஞர் 4:** தெரியவில்லை.

**அறிஞர் 5:** மேல் சென்றுள்ள பகுதி?

**அறிஞர் 6:** தெரியவில்லை. அடிமரம் எத்தனை உயரமோ அத்தனை உயரம் இருக்கவேண்டும். நடுமரம் வெட்டி அகற்றப்படுகிறது. நடு மரத்தின் பருமனைக் குறைப்பது தான் நடக்கவேண்டிய வேலை.

**அறிஞர் 1:** ஆலின் நடுவில் ஊடுருவும் கற்களிலிருந்து நமக்கு ஏதாவது ஆதாரம் கிடைக்கக் கூடுமா? பெரியார் விடையருள வேண்டு கிறேன்.

**பெரியார் கிளிச்சிறை:** உலகமக்கள் அனைவரும் உறவினர் என்பதற்கு எங்கணும் ஆதாரங்களைக் காணுகின்றேன். வட பெருஞ்சோலை தென்பெருஞ்சோலை இரண்டு இடத்திலும் உள்ள மக்களும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளே என்பதை எதுவும் மறுக்க வில்லை. ஆயினும் இதை, உலகிற்குக் காட்டி மெய்ப்பிக்க என்னால் முடியவில்லை; காரணம் மக்கள் பண்படவில்லை.

ஆலமரத்துக் கற்கள் நாட்டுமக்கள் அனைவரும் உறவினர் என்பதையாவது எண்பிக்க உதவும் என்று நம்புகிறேன். முயற்சியைக் கைவிட வேண்டாம்.

அதே நேரம் அரசினர் காவற்காரனும் முல்லையின் கணவனும் ஆகிய கடியன் வருகிறான்.

அறிஞர் 1: என்ன செய்தி கடியனே, போர் எது வரைக்கும் உள்ளது?

அறிஞர் 2: போர்நிலை அறிய இவனையா பணித்தீர்கள்?

அறிஞர் 3: இவன் பித்தன். அன்று அரசனும் அரசியும் கோட்டைக் கோபுரத்திலிருந்து தென்பெருஞ்சோலையைச் சீறிப் பேசியிருக்கையில் 'அனைவரும் உறவினர்' என்று கூறியவன்.

அறிஞர் 4: கொள்கையிற் பற்றுள்ளவன்.

அறிஞர் 5: கடியனே, போர் நிலை எப்படி?

கடியன்: இந்நாட்டின் நால்வகைப் படையும் காவிரியின் வடகரையை அடைந்துவிட்டது. பகைவரின் நால்வகைப்படையும் தென் கரையை அடைந்து விட்டது விற்போர் தொடங்கியிருக்கிறது. இரு சார்பினரும் தொடுக்கும் அம்புகள் வானையே மறைக்கின்றன. வடகரையில் நம்மவர்கள் இதுவரைக்கும் நூறுபேர் மாண்டனர். பகைவர்களிலும் பலர் மாண்டிருப்பார்கள். இடையே கவண் கற்களும் சீறுகின்றன. இரு சார்பினரும் ஆற்றைக் கடக்கவும் முயல்கின்றனர்.

நம் நாட்டின் யானையொன்று கண்ணிழந்தது. பகைப் படையின் குதிரை ஒன்று இறந்தது.

பெரியார்: பகை பகை என்கிறாய். எது பகை எவர் பகைவர்?

கடியன்: மன்னிக்க வேண்டும் ஐயா.

பெரியார்: அரசர்க்கு அறமுரைத்தேன். அவர் சீறினார். போருக்குக் காரணம் வடபெருஞ்சோலை மன்னர், அறவழியில் ஆட்சி நடத்தவில்லை என்று தென்பெருஞ்சோலை மன்னர் செப்பியதாகக் கேள்விப்பட்டதுதான். இதற்காக இரு நாட்டு மக்களையும் போரில் இழுத்து விட்டார் வடபெருஞ்சோலை மன்னர். உடன் பிறந்தவர் தம்மில் உயிர் மாளுகின்றார்கள். போர் நடக்கும் இடம் நோக்கிப் போக வேண்டும். நாம்; மீண்டும் நம் மன்னரைக் கண்டு போரை நிறுத்தும்படி கேட்டுக் கொள்வோம்.
(அனைவரும் போகிறார்கள்.)

## 27

வடபெருஞ்சோலையில் ஓர் மன்றில் போர்நிலை பற்றிய செய்தி அறிவிக்கப்படுகிறது. அரசியல் அலுவல்காரன் ஒருவன் பொது மன்றின் நடுவில் நின்று பேசுகிறான். ஊர்ப் பொதுமக்கள் கேட்கிறார்கள்.

வடபெருஞ்சோலை நாட்டுமக்களே, நாட்டு மன்னர் நம்மை நல்லபடி நடத்தவில்லை என்று அந்தத் தென்பெருஞ்சோலை மன்னன் செப்பினான் அன்றோ?...

அங்கிருந்த பெரியார் கிளிச்சிறை குறுக்கிட்டு 'எப்போது செப்பினான் அப்பா?' - என்கிறார்.

**அலுவல்காரன்:** சென்ற திங்களில், செப்பினான். அதனால் நம் அரசர் அகம் துடித்தார். அந்தத் தென்பெருஞ்சோலையானின் வாய்க் கொழுப்பை அடக்க எண்ணினார்; போர் தொடங்கினார்.

**பெரியார்:** குறுக்கிட்டு 'அந்த மன்னர் நம் மன்னரைப் பழித்தால் நம் மன்னர் தனி முறையில் அவரை ஏதாவது செய்திருக்கலாம், அப்பா. அதன்பொருட்டு ஏதுமறியாத நாட்டு மக்களை அந்நாட்டு மக்களுடன் போர் செய்யத் தூண்டுவானேன் அப்பா. அதுவுமன்றி அம் மன்னர் நம்மன்னரைப் பழித்ததாகக் கூறியவர் யார்? ஆய்ந் தோய்ந்து பார்க்க வேண்டாமா அப்பா.

**அலுவல்காரன்:** குன்றூர்ப் பண்ணையாளிடம் அந்த மன்னன் கூறினான். அந்தக் குன்றூர்ப் பண்ணையாள் நம் மன்னரிடம் கூறினான். ஆதலால் நம் படைகிளம்பியது. காவிரியாற்றின் கரையை அடைந்தது. பகைப் படையும் தென்கரையில் வந்து எதிர்த்தது. தொடங்கினார்கள் விற்போர். எதிரிகளில் மிகப்பலர் அழிந்தார்கள். தொடங்கியது கவண் போர். எதிரிகள் மிகப் பலர் அழிந்தார்கள். எதிரிகளின் யானைகள் பல மாண்டன. குதிரைகளில் பல மாண்டன.

(அதன் பின் காவிரியாறு கடந்து நம் படை தென் பெருஞ் சோலை நாட்டின் உட்புகுந்து விட்டது! ஒழிகின்றார் தென்பெருஞ் சோலை மக்கள். வெற்றி நமக்கே! வாழ்க மாறன் திருக்காத்த மன்னர்.)

**பெரியார் கூறுகிறார்:** தென்பெருஞ்சோலை மக்களின் அழிவு வடபெருஞ்சோலையின் அழிவல்லவோ அப்பா. அனைவரும் உறவினர் அன்றோ அப்பா.

## 28

(செய்தி முடிகிறது. பெரியார் கிளிச்சிறையாரின் சொல்லை யாரும் பொருள்படுத்தவில்லை. ஊர் மக்கள் தத்தம் வீடு செல்கிறார்கள். பெரியாரும் அறிஞர்களும் போர் நடக்கும் இடநோக்கி நடக்கிறார்கள்.)

## 29

(தென்பெருஞ்சோலை எரிகிறது. எரி வானளாவுகிறது, தழை மரங்கள் எரிகின்றன. கூரையின் கொள்ளிகள் மேலேழுகின்றன. மக்கள் அழுகுரல் கேட்கிறது. மரம், கல் மூங்கில் வெடிக்கின்றன.

வடபெருஞ்சோலை மக்கள் காவிரியாற்றின் இக்கரையிற் கூடி நின்று தென்பெருஞ்சோலையின் தீயக் காட்சியைக் காணுகின்றார்கள். சிலர் தத்தம் வீட்டு மாடிமேல்நின்று நோக்குகிறார்கள்.

(தென்பெஞ்சோலை மக்கள் அனைவரும் அழிந்து விடுவார் களோ என்று வடபெருஞ்சோலையினர் நடுங்குகிறார்கள். ஐயோ என் உறவினர் நிலை என்ன ஆயிற்றோ என்று ஏங்குகிறார்கள் பலர். என் பெற்றோர் இறந்தாரோ என்று நடுங்குவார் சிலர். என் தங்கையை இப்போது தானே திருமணம் செய்வித்துத் தென்பெருஞ் சோலை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பினேன். எரிகிறதே தென் பெருஞ் சோலை. எரிகிறதே என் வயிறு என்று கண்ணீர் விட்டு கதறுவான் தந்தை தாயற்ற இளைஞன் ஒருவன். மகளுக்காக அழுவாள் ஒருதாய்; தாய்க்காக அழுவாள் மகள். தம்பியை எண்ணி அழுவான் அண்ணன்; அண்ணனை எண்ணி அழுவான் தம்பி.)

தென் பெருஞ்சோலையிலுள்ள ஒவ்வொருவரையும் எண்ணி வடபெருஞ்சோலையினர் அனைவரும் அழுது துடித்தார்கள்.

இக்காட்சியை, இவ்விரக்க குரல்களைப் பெரியார் கிளிச் சிறையாரும், மற்றும் உடனிருந்த அறிஞர்களும் நேரிற்கண்டும் கேட்டும் உள்ளம் துடிக்கிறார்கள்.

'அனைவரும் உறவினர்! அனைவரும் உறவினர்!' என்று முழக்கம் செய்கின்றனர்.

போர் நடக்கும் இடத்தை நாடி மேலும் நடக்கின்றார்கள்.

வடகரையை அவர்கள் அடையும்முன், போர் நிலை கூறுவோர் எதிர்ப்படுகிறார்கள். அவர்கள் கூச்சலிட்டுக் கூறுகிறார்கள்:

"நம் படை தென்பெருஞ்சோலையின் ஒரு பகுதியைத் தீக்கிரை யாக்கியது. எதிரிகள் நூற்றுக்கணக்காக மாண்டனர். ஆயினும் துன்புறுத்தப்பட்ட தென்பெருஞ்சோலை நம் படையை ஒற்றுமையுடன் எதிர்க்கிறது ஆதலால் நம் படை பின்வாங்கிற்று!"

(பெரியார் கிளிச்சிறையார் அது கேட்டுத் தம் அறிஞரிடம் கூறுகிறார்!)

(நண்பர்களே, வடபெருஞ்சோலையின் படை பின் வாங்குகிற தாம். அரசரை அரண்மனையில் காணமுடியும் விரைவில். ஆதலால் நாம் அரண்மனையிற் காத்திருப்போம்.

அனைவரும் போகிறார்கள்.

## 30

(அரண்மனையில் திருக்காத்த மன்னனும் அமைச்சனும் படைத் தலைவனும் தலையாய அலுவல்காரரும் அமர்ந்திருக்க, எதிர்பார்த்த படி, பெரியார் கிளிச்சிறையாரும் அறிஞர்களும் வருகிறார்கள். அரசர் இருக்கை காட்ட, அனைவரும் அமர்கிறார்கள்.)

**அரசர்:** சொல்ல வந்ததென்ன?

**பெரியார் கிளிசிறை பேசுகிறார்:** அரசே, இப்போது நடை பெற்ற போரினால் என்ன பயன் கண்டோம்? வடபெருஞ் சோலை மக்கள் பலரை இழந்தது. தென்பெருஞ் சோலையிலும் தீர்ந்தனர் மிகப் பலர்.

இதனால் வடபெருஞ்சோலையும் தென்பெருஞ் சோலையும் தம் மக்களில் பலரை இழந்தன. அதனால் மக்களுலகம் தம் மக்கள் பலரை இழந்தது.

தென்பெருஞ்சோலை தீப்பட்டெரிந்தபோது வடபெருஞ் சோலை மக்கள் ஐயோ எம்முறவினர் நிலை என்ன ஆயிற்றோ என்று கதறினார்கள். அங்கு இன்னல் உறுகின்றார்களோ என இங்குள்ள அவருறவினர் ஏங்கித் துடித்தனர். அனைவரும் உறவினர் அன்றோ?

இருபுறத்திலும் இந்தப் போரில் மக்கள் இன்னல் உறுகையில் உயிரை இழக்கையில் அறிவுலகம் இரங்கிற்று ஏன்? அனைவரும் உறவினர் அன்றோ?

இனியும் போர் நிகழாமலிருக்க வழி தேடியருள வேண்டுகிறேன் தங்களை!

நீங்கள் யார்? தென்பெருஞ்சோலை மன்னர் யார்? உறவினர் அன்றோ? போர் வேண்டாம்! மக்கள் மாய்தல் வேண்டாம்!

போருக்குக் காரணம் என்ன?

தென்பெருஞ்சோலை மன்னன் தங்களைத் திட்டினார் என்று தாங்கள் கேள்விப்பட்டதுதான்.

தங்களைத் திட்டியது உண்மையா? உண்மை என்றே வைத்துக் கொள்வோம். தனிமுறையில் அதை நீவிர் இருவரும் தீர்த்துக் கொண் டிருக்கலாம். இனிய முறையில் அந்தச் சிக்கலைத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். பெருமக்களை இத்தகைய இன்னலில் போய்ப் பாம்பின் பல்லிடுக்கில் ஏன் இழுத்து விடவேண்டும்?

போர் வேண்டாம். மாய்தல் வேண்டாம். இதையே தென்பெருஞ்சோலை மன்னர்க்கும் யாம் போய்ச் சொல்ல, உத்தரவு கொடுங்கள்; அனைவரும் உறவினர்.

**மன்னன்:** கிளிச்சிறையாரே, மக்கள் அனைவரும் உறவினர் என்பது கற்பனை. வடபெருஞ்சோலையினரும் தென்பெருஞ்சோலைத் தீயரும் உறவினர் என்பதில் சிறிது உண்மையிருப்பினும் அது இருநாட்டிற்கும் ஏற்பட்டுள்ள போரை நிறுத்திவிடாது.

**கிளிச்சிறை:** இரு மன்னரும் உறவினர்; குருதிக் கலப்புள்ளவர்கள் என்பது மெய்யாய்விட்டால் போர் நிறுத்தப்படும் என்று எண்ணுகிறேன்.

**மன்னன்:** மெய்யாகும் போது பேசவேண்டிய பேச்சு அது.

**கிளிச்சிறை:** இருநாட்டு மக்களும் குருதிக் கலப்புள்ளவர் என்பது எடுத்துக் காட்டப்பட்டால் போர் நிறுத்தப்படும் என்று எண்ணுகிறேன்.

**மன்னன்:** ஐயமேது?

**கிளிச்சிறை:** இருநாட்டினர் அனைவரும் உறவினர் என்று முடிந்தால் உலக மக்கள் அனைவரும் உறவினர் என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்.

**மன்னன்:** இருக்கலாம்

**கிளிச்சிறை:** போர் நிறுத்தப் பட்டதா தற்போது?

**மன்னன்:** நம்மைப் பொறுத்த வரைக்கும்!

**கிளிச்சிறை:** விடை தருக!

**மன்னன்:** நன்று

(போகிறார்கள்)

## 31

(தென்பெருஞ்சோலையின் அஞ்சி மன்னன் தன் அமைச்சர் முதலானோருடன் பெரியார் கிளிச்சிறைக்கும் உடன் வந்த அறிஞர் கட்கும் காட்சியளிக்கிறான்.)

**கிளிச்சிறை:** அரசே, உலகில் அனைவரும் உறவினர். வடபெருஞ் சோலை மன்னரும் தாங்களும் குருதிக்கலப்புள்ள உறவினர். இவ்விரு நாட்டுமக்களும் பிரிக்கமுடியாத உறவினர். உலகில் ஒரு தனி மாந்தனுக்கு ஏற்படும் இன்ப துன்பங்கள் உலக மக்கள் அனைவர்க்குமே ஏற்படுவதாகும். வடபெருஞ்சோலையும் தென்பெருஞ்சோலையும் இழந்த மக்களை எண்ணி உயிருட னிருக்கும் இருநாட்டு மக்களும் இன்று வருந்தவில்லையா?

ஆதலால் நிகழ்ந்த போருக்கு நாமெல்லோரும் வருந்துவோமாக, இறந்த மக்கள் பொருட்டு நாம் அனைவரும் வருந்துவோமாக. இனியும் இவ்வகைப் போர் நிகழாதிருக்க வேண்டும்; ஏற்ற சூழ்நிலையை உண்டாக்குவோம். போர் நிகழாதிருக்க அருள் புரிய வேண்டும். இதை நான், இரு நாட்டு மக்கள் பேராலும் தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்; அறிவுலகம் தங்களைக் கேட்டுக் கொள்கிறது.

**அஞ்சி மன்னன்:** அப்படியா ... ... ... ... இருந்தாலும் ... ... ... ...

இன்னது சொல்வது என்று தோன்றாமல் அஞ்சி மன்னன் மயங்குகிறான். கடைசியாய் ஒரு முடிவுக்கு வருகிறான்; அவன் கிளிச்சிறையிடம் கூறுகிறான்:

பெரியாரே, நான் உங்கள் வேண்டுகோளின்படி போர் செய்யாமல் இருந்துவிடுகிறேன். நீங்கள் உலகமக்களின் நன்மையைக் கோரி மாறன் திருக்காத்த மன்னருக்கும் இப்படியே கூறி, அவரையும் போரிடாமல் கட்டுப்படுத்த வேண்டுகிறேன்.

**கிளிச்சிறை:** மகிழ்ச்சி மன்னரே, தாங்கள் போரிடாதிருந்தால் அவரும் அவ்வாறே இருந்துவிடக்கூடும் என்று நம்புகிறேன்.

**அஞ்சி:** உத்தரவு பெற்றுக் கொள்ளுங்கள். ஆயினும் என் அரண்மனை யில் இன்று விருந்துண்டு போக வேண்டுகிறேன்.

**கிளிச்சிறை:** அவ்வாறே ஆகட்டும்.

(அரசினர் அலுவல்காரர் சிலர் கிளிச்சிறை முதலியவர்களை அழைத்துச் செல்லுகிறார்கள்.

அவர்கள் போனபின் அஞ்சி மன்னனும் அமைச்சரும், படைத்தலைவனும் பேசுகிறார்கள்.)

**அரசன்:** தென்பெருஞ்சோலையின் சிறு பகுதி தீக்கிறையாயிற்றுப் பகைவரால்! நம் படையில் பெரும்பகுதி அழிந்தது பகைவரால்! உற்றாரை இழந்து ஊர் அழும் அழுகை தீர்ந்த பாடில்லை இன்றுவரை! போரை நிறுத்த வேண்டுமாம் நாம்.

**படைத்தலைவன்:** நேரத்திற்கேற்றபடி அவர்கட்கு விடை கூறினீர்கள்.

**அமைச்சர்:** நம் படையை நாம் பெருக்க வேண்டும். அதற்குச் சில மாதங்கள் ஆகும். அதன் பொருட்டு இந்த வடபெருஞ்சோலை ஆட்களுக்கு நல்லவகையில் நம் அரசர் விடைகூறினார். நம்பிக் கொண்டிருக்கட்டும் அந்த வடபெருஞ்சோலை மன்னன். இதையே, இதையே அவன் நம்பிப் போர் முயற்சியில்லாமல் தூங்கட்டும். நம் படையைப் பெருக்கிக்கொண்டு, திடீரென்று வடபெருஞ்சோலை மன்னனையும், மக்களையும் தொலைப் போம். தென்பெருஞ்சோலையின் அஞ்சிமன்னர் கொடி வடபெருஞ் சோலையில் வானளாவிப் பறக்கட்டும்.

**அஞ்சி:** அவ்வளவுதான்!
(செல்லுகிறார்கள்)

## 32

(தென்பெருஞ்சோலையினின்று ஓர் படகு நிறைய மக்களைச் சுமந்தபடி வடபெருஞ்சோலைக் கரையை அடைகிறது. வடகரையில் நன்னன் அவன் மனைவி பச்சைமயில், நன்னனின் தம்பிமார்; நன்மானன், நன்மார்பன்; நன்னனின் தங்கைமார்; பொன்கிளை, பொன்மான் - ஆகிய அறுவரும் ஆவலுடன் வரவேற்கிறார்கள்.)

படகிலிருந்து பரிமேலழகன், அவன் மனைவி பொன்னாவிரை, பரிமேலழகனின் தம்பிமார்; பரியூர் வள்ளல், பரிமேற்பரிதி, பரிமேலழகனின் தங்கைமார்: பச்சைக்கிளி, பச்சைக் கொடி ஆகிய ஆறுபேறும் இறங்குகிறார்கள்.)

**நன்னன் முதலியவர்கள்:** நலந்தானே! நலந்தானே!

**பரிமேலழகன் முதலியவர்கள்:** நலந்தானே! நலந்தானே!

**நன்னன்:** போரில் தப்பினோம். வாழ்கின்றோம் மைத்துனரே.

**பரிமேலழகன்:** வாழ்கின்றோம் மைத்துனரே.

**நன்னன்:** தங்கை பொன்னாவிராய்! போருக்குப் பின்னும் உன் அத்தானை நீ பெற்றாய். மகிழ்ச்சியம்மா!

(அன்பாகப் பார்த்து மகிழ்கின்றார்கள் அண்ணனும் தங்கையும்.)

**பரிமேலழகன்:** தங்கை பச்சைமயிலே! உன் அத்தானோடு உன்னைக் காண மகிழ்ச்சியம்மா!

(தங்கை தமயன் மகிழ்ச்சிப் பார்வை! நன்மானன் கண்கள், பொன் கிளையின் பார்வையில் பட்டுத்தெறிக்கின்றன. பொன்கிளை நாணி முகம் கவிழ்கின்றாள். அவள் கடையுதடு மாணிக்கம் சிதறுகின்றது! பரிதிமேல்வள்ளல் பச்சைக்கிளி முகம் பார்த்துக் கண்கூசுகிறான். பச்சைக்கிளியின் முத்துப் பற்கள் காதல் ஒளியைக் கக்குகின்றன. நன்மார்பன் நடுங்குகின்றான் பச்சைக்கொடியின் அச்சுமுகம் கண்டு! பச்சைக் கொடி புன்னகைமின்னித் தன் காதலைக் குறிப்பிடுகிறாள். பரிமேற்பரிதி, கொடியிடை துவள நிற்கும் பொன்மானைக் கண்டு நெஞ்சைக் கப்பணமாக்குகின்றான். பொன்மான் உள்ளம் தன்னை பரிமேற்பரிதிக்குக் காணிக்கையாக்குகின்றது.

அனைவரும் தேர்களில் ஏறி வடபெருஞ்சோலை நன்னன் வீடு சேர்கின்றார்கள்.)

## 33

வட பெருஞ்சோலையில் நன்னனின் பெருமாளிகை அன்றிரவு வெண்ணிலவின் ஒளியில் விளக்கம் அடைகிறது. அதன் பலகணிகளின் உட்புற நோக்கித் தென்றல் புகுந்து இனிமை உதவுகின்றது. இன்பத்தை நுகர்ந்தபின் ஆழ்ந்த தூக்கத்தைத் தழுவியிருக்கும் நன்னனையும் பச்சை மயிலையும் அத்தென்றல் வாழ்த்தியுலாவியிருந்தது. அவ்வாறே பரிமேலழகனும் பொன்னாவிரையும் தூங்கும் கட்டிலில் தென்றல் அவர்களின் தூக்கம் கலையாமல் விசிறிக் கொண்டிருந்தது.

ஆயினும் நன்மானனைக் காதல் நினைவிலிருந்து மீட்க அத்தென்றலால் முடியவில்லை. விழித்திருக்கும் அவனைத் தூக்க உலகில் சேர்க்க அத்தென்றலால் முடியவில்லை. நன்மானன் பச்சைக் கிளியின் உச்சிமுதல் உள்ளங்கால் வரைக்கும் தான் கண்ட அழகைத் தன் மனக்கண்ணால் மீண்டும் மீண்டும் சுவைத்துக் கிடந்தான். தன் தனிமையைத் திட்டினான். குளிர்ந்த தென்றல் படுத்தும் தொல்லையை

அவனால் பொறுக்க முடியவில்லை. அரண்மனையை அடுத்த மலர் வனத்துக்கு ஓடினான். புன்னைமரத்தின் அடியில் கட்டப்பட்டிருந்த திண்ணையை அடைந்தான். திண்ணை பேசுவது கேட்கிறான்.;

மைத்துனரே உங்கட்கும் தூக்கம் வரவில்லையா?

**நன்மானன்:** யார்? பரிமேல் வள்ளலா? திண்ணையில் புரள்வானேன் இந்நேரத்தில்!

**பரிமேல் வள்ளல்:** என்ன இருப்பினும் எனக்கு இது புதிய இடந்தானே?

(இருவரும் தம் மனநிலைக்குப் புறம்பான செய்தி பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதேநேரத்தில் தேன்மொழி என்னும் தோழியும் பச்சைக் கிளியும், பொன்கிளையும் அங்கு வருகிறார்கள்.)

**பச்சைக்கிளி:** ஏன்தோழி! என் அண்ணனோடு யார் பேசியிருப்பவர்?

**தோழி:** நன்மானன் நன்னன் இருக்கிறாரே...

**பச்சைக்கிளி:** தெரியாதா என்ன? அவர் தம்பி! நாம் ஏன் இங்கு வந்தோம்.

**தோழி:** தூக்கம் வரவில்லை. சோலைக்கு வா என்றவள் நீ தானே!

**பச்சைக்கிளி:** சொன்னதுண்டு. அவர் இந்நேரத்தில் இங்கிருப்பார் என்று எனக்கு எப்படித் தெரியும்?

**பொன்கிளை:** எப்படி எப்படி? என்னைப் பார்த்துப் பேசு. நீ தானே தெரிவித்தாய் சற்றுமுன், உன் அண்ணனும் என் அண்ணனும் சோலையில் இருக்கிறார்கள் என்று!

**தோழி:** அப்படியானால் தனியாக நீ சேர்லைக்கு வந்திருக்கிறாய் சற்றுமுன். உள்ளத்தை ஏன் மறைக்கிறாய் பச்சைக் கிளியே? நன்மானனைக் கண்டது முதல் உன் நிலை இன்னபடி என்று எனக்குத் தெரிகிறதே. அவர் போலப் படம் வரைந்தாய்; வரைந்த படத்தை வாரியணைத்தாய்.

**பச்சைக்கிளி:** நான் போகிறேன்.

(வருத்தத்துடன் பச்சைக்கிளி போகிறாள்.)

அவளைத் தோழி பின் தொடர்கிறாள்)

**தோழி:** நான் சொன்னேன் என்று வருத்தமா?....

(இந்த நிலையை உற்றுநோக்கி இருந்த நன்மானன் பரிமேல் வள்ளலை விட்டுப் பிரிந்து அங்கே வருகிறான்.)

**நன்மானன்:** யார்? தோழியா?அங்கே யார்?

**தோழி:** தங்கள்மேல் உயிர்வைத்திருக்கும் பச்சைக்கிளி.

**நன்மானன்:** இது நீ தொடுத்த புகழ்மாலை.

**தோழி:** அப்படியானால், பச்சைக்கிளி தங்களை வெறுப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

**நன்மானன்:** பச்சைக்கிளி பேசவேயில்லை! அப்படித்தான் நினைக்கிறேன்.

**பச்சைக்கிளி:** நான் பேசவேண்டியதில்லை; நீங்களே என் மீது பழிபோடுங்கள்.

(கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுகிறாள் பச்சைக்கிளி.)

**நன்மானன்:** பச்சைக்கிளி என்னுயிர் என்று நான் நினைப்பதை எடுத்துச் சொல்ல இங்கு எனக்கொரு தோழன் இல்லை. பச்சைக்கிளியின் வருத்தத்தைத் தீர்க்க எப்படி என்னால் முடியும்?

**தோழி:** வாழ்க மணமக்கள்!

(அவனும் நடந்தான், அவளும் நடந்தாள் தம்மையறியாமல்! மயங்கினாள் தோழி.)

**தோழி:** நான் பொன்கிளையை அழைத்து வந்து விடுகிறேன். நீங்கள் பேசிக்கொண்டே போகலாம்.

(தோழி திரும்புகிறாள். திண்ணையருகில் பொன்கிளையும் பரிமேல் வள்ளலும் பேசியிருக்கிறார்கள்.)

**தோழி:** நான் வரலாமா?

**பரிமேல் வள்ளல்:** ஏன்?

**தோழி:** தங்கட்குத் திருமண வாழ்த்துச் சொல்ல!

**பொன்கிளை:** அப்படியானால் நாளைக்குத் திருமண விழா.

**தோழி:** ஒன்றுக்கு இரண்டு

**பரிமேல் வள்ளல்:** அப்படியா? நன்மானன் பச்சைக்கிளி நன்மணம் வாழ்க.

**தோழி:** நான் போகிறேன். மெதுவாக வாருங்கள்.

(போகிறாள்)

## 34

நன்மானன், பச்சைக்கிளி ஆகிய மணமக்கள், ஓரிணையாகவும், பரிமேல் வள்ளல், பொன்கிளை ஓரிணையாகவும் மணமன்றில் காட்சி யளிக்கிறார்கள். மணமன்றில் பெரியவர்களும் அறிஞர்களும் மன்னரும் நிறைந்திருக்கிறார்கள். நன்னனும் பச்சைமயிலும் மன்றினரைக் கை கூப்பி, மணமக்களுக்கு வாழ்த்துக் கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறார்கள்)

வடபெருஞ்சோலை மன்னன் மாறன் எழுந்து மணமக்களைப் பாராட்டுகிறான்:

மன்றினரே! நன்மானன், நம்நாட்டு நூற்றுவர் முதலி என்பதை நீங்கள் அறிவீர்கள், பொன்கிளை அவர் தங்கை! போர் நிறுத்தப்பட்டவுடன் நலம் உசாவ வந்த பச்சைக் கிளிமேல் நன்மானன் காதல் கொண்டார். பச்சைக்கிளியாரும் அவர்மேற் காதல் கொண்டார். அது போலவே, பரிமேல் வள்ளல் என்ற தென்பெருஞ்சோலை நூற்றவர் முதலியாகிய பரிமேல் வள்ளல், பொன்கிளை ஆகியவர்கள் தம்மில் உள்ளம் ஒத்துப் போனார்கள். நன்மானன் பொன்கிளை, என் நாட்டார். பரிமேல் வள்ளல் பச்சைக்கிளி பகைநாட்டார். இன்று இவர்கள் மட்டும் உறவினர்.

(அனைவரும் உறவினர் - என்ற குரல் மன்றின் நடுவிலிருந்து எழுகின்றது. பெரியார் கிளிச்சிறை எழுகின்றார்.)

**கிளிச்சிறை:** அந்நாட்டாரும் இந்நாட்டாரும் பிரிக்க முடியாத உறவினர். இதை இந்த இரண்டு திருமணமும் நமக்கு நினைவுறுத்துகின்றன.

(அனைவரும் உறவினர் என்று பெருங்குரலில் கூறுகிறார். அனைவரும் அவ்வாறே கூறுகிறார்கள். மணவிழா முடிவுபெறுகிறது. அனைவரும் உணவருந்துகிறார்கள்.

நன்னனும் பச்சைமயிலும் தாம் முன்னின்று முடித்த திருமண நிகழ்ச்சியைக் குறித்துப் பேசி இரவு பத்து மணிக்குத் தூங்கப் போகிறார்கள்.

## 35

நன்மானன் பச்சைக்கிளி ஆகிய புதுமணக்களும், பரிமேல் வள்ளல் பொன்கிளை ஆகிய புதுமண மக்களும் இன்பம் நுகர்ந்தபடி அந்த இரவே வழிகூட்டி அனுப்புகிறார்கள். காலைப் பொழுது தோன்றுகிறது. இளங்கதிர் சிறிது சூட்டோடு காட்சியளிக்கிறது.

## 36

வடபெருஞ்சோலைத் தெருக்கள்தோறும் பறை முழக்கம் கேட்கிறது. அரசினர் கட்டளை போர் மறவர்களை நோக்கிப் பறக்கிறது. தென்பெருஞ்சோலையின் படை வடபெருஞ் சோலைமேல் எழுகின்றது என்ற அறிவிப்புக் கேட்டு எங்கும் அமைதியின்மை காணப்படுகிறது. படைவீடுகளில் படைத்தலைவர்களும் மறவர்களும் தடதடவென்று வேலை பார்க்கிறார்கள்.

ஒருபுறம் யானைப்படை, மற்றொருபுறம் குதிரைப்படை, இன்னொருபுறம் தேர்ப்படை, ஒழுங்கு செய்யப்படுகின்றன. காளையர், போரிற் கலந்துகொள்ள அரசரின் ஆணைகேட்க ஓடுகிறார்கள். படைப் பழக்கம் ஒத்திட்டுப் பார்க்கப்படுகிறது பெருவெளியில் நன்மார்பன் தன் அண்ணன்மார்களான நன்னன், நன்மானன் ஆகியோரிடம் விடை பெற்றுக்கொண்டு அரசரிடம் போகிறான். வழியில் நன்னன் மனைவி யும், தன் அண்ணியுமான பச்சைமயில், தன் சிறிய தங்கையான பச்சைக் கொடியுடன் கூடத்தில் நிற்கிறாள்.

- *குயில் (திங்களிதழ்), புதுச்சேரி;* **15.6.1948; 15.7.1948; 15.8.1948; 15.10.1948**

---

குறிப்பு : **இத்தொடர் கதை முற்றுப் பெறவில்லை.**

**1 முதல் 36 வரையிலமைந்த கதைத் தொடர்ச்சி வரிசை எண்கள் குயில் இதழில் முறையாகக் குறிக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக 7, 19, 28, 35 ஆகிய எண்கள் இல்லை. கதைத் தொடர்பைக் கருத்தில் கொண்டு மேற்சுட்டிய எண்களைத் தொகுப்பாசிரியர் தந்துள்ளார்.**

◆ ◆ ◆